385

# இந்திய சரித்திரக் கும்மி

[நமது நாட்டின் வரலாறு முழுதும் அடங்கியது.]

கவியோகி சுத்தானந்த பாரதியார்.
இயற்றியது.

385
2-64

SCRUTINY OFFICER
5 JUN 1964
PUBLIC (INFORMATION AND PUBLICITY) DEPARTMENT



O-,8651M53
H64
M3395

...தானந்த நூலகம்,
யோக சமாஜம்
...டையாறு, சென்னை-20.

# இந்திய சரித்திரக் கும்மி

[நமது நாட்டின் வரலாறு முழுதும் அடங்கியது.]

கவியோகி சுத்தானந்த பாரதியார்

இயற்றியது.

விலை: 0—40 ந. பை.

சுத்தானந்த நூலகம்,

யோக சமாஜம்

அடையாறு, சென்னை-20.

# இந்திய சரித்திரக் கும்மி

1. பாரத பூமி.
2. தமிழர் வரலாறு.
3. வேத பாரதம்.
4. பௌத்த இந்தியா.
5. சந்திர குப்த ராஜ்யம்.
6. அசோகன்.
7. இந்து மன்னர்.
8. கனிஷ்கன்.
9. குப்தரும் வர்த்தனரும்.
10. இஸ்லாம் இந்தியா.
11. பாரத வீரர்.
12. வீர சிவாஜி.
13. தென்னாட்டின் பெருமை.
14. கும்பினி இந்தியா.
15. பிரிட்டிஷ் இந்தியா.
16. சுதந்தர இந்தியா.
17. எண்ணிய காரியம் (காந்தி சகாப்தம்).
18. காந்தி வாழ்த்து.
19. எங்கள் இமாலயம்.
20. வீறு கொண்டு முன்னேறுவோம்.

O-,85MSB,E
N64
113395

# பதிப்புரை

ஒவ்வொருவருக்கும் தாய்நாட்டு வரலாறு தெரிய வேண்டும். நாம் இந்தியர். நமது நாட்டு வரலாறு மிக விரிவானது; குமரிகண்டம் முதல் காந்தியுகம் வரையில் நமது நாட்டு வரலாற்றை மாணவரும் பொதுமக்களும் இரண்டு மணி நேரத்தில் அறிய வேண்டும். கும்மிமெட்டில் கோவையாக நமது சரித்திரத்தைப் பாடியளிக்க வேண்டும் என்று வீரவிளக்கு வ. வே. சு. ஐயர் வேண்டினர். கவியோகி சுத்தானந்தர் 1922ல் ஓர் இரவில் இக்கும்மியைப் பாடினர். நவராத்திரியின் போது இதைத் தாமே மாணவருடன் பாடியாடிக் காட்டினர். அண்மையில் இமாலயப் போரைப் பற்றி அவர் சென்னை வானெலி கவியரங்கில் பாடியதையும் சேர்த்துள்ளோம். இந்தக் கும்மி முழுதும் வானெலிக்கப் பெற்றது.

இக்கவிக்ள் மாணவ, மாணவிகளுக்கு மிகப்பயனுகும். இந்தியத் தாயின் உருவத்தை ஒரு விளக்கின் முன்வைத்து இசைக் கருவிகளுடன் இணைந்து, இந்திய சரித்திரத்தை இனிய குரலிற் பாடிக் கும்மி தட்டுக. கேட்பவர் உள்ளத்தில் நாட்டுணர்ச்சி எழுந்து கொழுந்திடும். கிராம மக்கள் நம் நாட்டு வரலாற்றை அறிய இந்தக் கும்மி பெரும் பயனுகும். தமிழக மெங்கும் இப்பாடல்கள் முழங்குக. தமிழர் திருநாட்களில் இக்கும்மியை வாங்கி வாங்கி எல்லாருக்கும் வழங்குக!

எமது யோகசமாஜ மணிகளான திருவளர் ராஜம்–ராஜகோபாலர் திருமணம் இங்கே சிறப்பாக நடந்தது. அந்நாளைக் கருதி இந்நூல் வெளிவருகிறது. புது மணாளர் இல்லறம் பொலிக!

இன்பமே சூழ்க! எல்லாரும் வாழ்க!

சென்னை–20,
15–3–64.

யோக சமாஜத்தார்

O-8S MSm, F
864



இந்திய சமுத்திரத்தில்—
எல்லையற விரிந்தது,
செந்தமிழ்க் குமரிக் கண்டம்—அதிலே
சேர்ந்த துண்டம் இந்தியா....

பக்குவ மாகவே
பண்டைச் சரிதையைப்
பகருவேன் கேட்டிடம்மா—தங்கமே
பாராண்ட நாளதம்மா....

இமய மலைக்கு முன்னே
இருந்த குமரிக் கண்டம்
தமிழகம் என்றறிவோம்—நமது
தாயகம் வாழியவே....

விந்தியம் நீலகிரி,
மேற்குக் கிழக்குத்தொடர்,
அந்தக் குமரிக் கண்டம்—தன்னிலே,
அணைந்த சிறு துண்டமே....

சோம சுந்தர னென்னும்
சூரன், இக் கண்டத்தை
மாமதுரைப் பதியில்—தங்கமே
மங்கள மாய்ப் புரந்தான்....

எத்தனை யோமன்னர்,
எத்தனை யோ வீரர்,
எத்தனை யோ புலவர்—தங்கமே
இலகி வளர்த்த நிலம்.

துள்ளிக் குதிக்கும் அலை
வெள்ளம் விழுங்கிடினும்,
அள்ளக் குறைவ துண்டோ?—தங்கமே,
அமுதத் தமிழ்க் கலையே....

புகழ்மிகு பாண்டியர்,
புதிய மதுரை கட்டி,
மகிழ்வுடன் ஆண்டு வந்தார்—இமய
மலையிற் கொடி யேற்றினர்....

அரசின் அறத்தினிலும்,
ஆண்மைத் திறத்தினிலும்,
முரசின் அதிர்ச்சியிலும்—வெற்றி
முழங்கிப் பொலிந்துவந்தோம்....

செந்தமிழ் வீரரென்ருல்,
செகமுந் தலைவணங்க,
முந்து புகழ் சிறந்தார்—தங்கமே,
முன்னேறிச் சென்ருரவர்....

பொங்குந் தமிழ்க் கலையைப்
புலவர் வளர்த்திடவே,
சங்கம் அமைத்தாரம்மா—தங்கமே,
சகம்புகழ் பாண்டியரே....

தெய்வத் திருக்குறளும்,
சிலம்புடன் மேகலையும்,
துய்ய சிந்தாமணியும்—தங்கமே
தொல் காப்பியத் தமிழே....

பத்துப் பாட் டெட்டுத் தொகை
பதினென்கீழ்க் கணக்குடன்,
முத்து முத்தாய்ச் சொல்லுமே—தங்கமே,
முத்தமிழின் வளமை....

அன்பு மணிவாசகம்,
ஆழ்வாரின் பாசுரம்,
கம்பன் கவியமுதம்—தங்கமே
கடவுட் கலை விருந்தாம்....!

கல்வி தொழில் வளமை,
கப்பல் சுமந்து வரும்;
செல்வ வளமையிலே—தங்கமே
செழித்தது செந்தமிழே....

செழியருடனே வீரச்
சேரரும் சோனகரும்
அழியாப் புகழ் விளங்க—தங்கமே
ஆண்டனர் நீண்ட யுகம்.

வீர நெடுஞ் செழியன்,
வெல்லுந் திரு வளவன்,
சேரன் செங்குட்டுவன் போல்—தங்கமே
சிறந்தநல் வேந்தர்கள் யார்?
எங்கும் அறிவோங்க,
எங்கும் இன்பம் பரவச்
செங்கோல் பிடித்தாரம்மா—தங்கமே,
செந்தமிழ் நாட்டரசர்....
மீனும் வில்லும் புலியும்,
விளங்கு மணிக் கொடியை,
வானுயர நாட்டினுர்—தங்கமே,
வாகைமிகச் சூட்டினுர்....

## 3. வேத பாரதம்.

மத்யமாவதி] [ஜம்பை

தன்னன தானு—தன தன—தன்னன தானு
தன்னன தன்னன தன்னன தன்னன
தன்னன தன்னன தன தன தன தன
தந்தன தானு....
செந் தமிழ்நாட்டின்—பழம்பெரும்
சீர்த்தியைப் பார்த்தோம்....
விந்தியந் தாண்டி விளங்கிய நம்புகழ்,
வேதகாலம் முதல் ஓதுவேன் கேளம்மா,
விமரிசையாக....!
இந்தியா முழுதும்—திராவிடர்
இருந்தனர் ஒருகால்....
சிந்துவெளியில் மகேஞ்சதாரோவிலே.
தேடக் கிடைத்திடும் சின்னங்களே—இதைச்
செப்பிடுந் தோழீ....
தந்தை தமிழே—ஆரியந்—தாயென லாமே;
இந்த மொழிகள் இரண்டும் வளர்த்ததே,
இந்திய நாகரிகம்—அதை எண்ணுவாய்,
இனிப் பிரிவுண்டோ?....

பண்டுயர் நாடு–பழம்புவி–பாராட்டும் நாடு,
வென்றிமேல் வென்றி விளைந்து சிறந்திட,
வேத முனிவரும் ஆகமச் சித்தரும்
விளங்கினர் தோழீ....

ஆனந்தப் பரமன்–ஒருவனே–ஆருயிர்த் தலைவன்,
ஆனந்தமே உயிர் வாழ்வென நித்திய
கானஞ்செய் வேதத்தை ஞானரசம் பொழி
கனி யெனச் சுவைப்போம்....

நீ அது வென்றே–முழங்கிடும்–தூயநல் வேதம்;
தாயமு தாகிய தாரக மாகவே
தழைத்தது பாரத தருமம்–அதன்பயன்
சாற்றுவேன் கேளாய்....

வான்மீகி வியாசர்–சுகர், யாக்ஞ–வல்கி, மைத்ரேயி,
ஆன மகாத்மாக்கள் ஆக்கிய வாக்குகள்,
அகிலமெல் லாம்புகழ் அத்யாத்மப் பொக்கிஷம்,
அனுபவிப்போமே....!

ஆரிய ராமன்–ஜயம்பெறும்–வீரவில் லேந்தி,
கோர அரக்கர் குமையத் தருமத்தைக்
குலமகள் கற்புடன் நலமுற நாட்டிய
கொள்கையைக் காணாய்!

தரும விஜயர்–கண்ணன்–சாரதியாக,
திருவிலிக் கெளரவர் தீமையைப் பல்லாண்டு,
பொறுமையாய்ப் பொறுத்தபின்
போர்செய்து வென்றதைப் புகலுவோம் தோழீ!

மோதிய போரில்–அருச்சுனன்–வாதனை கொள்ள,
கீதையினால் கர்ம யோகத்தைப் போதித்தான்,
கிருஷ்ண பகவான்; அவன்மொழி பாரத
வேத மென் றோதாய்!

ஆத்தும வீரர்–பிரம்மசர்யங்–காத்த புலவர்,
சாத்வீக சக்தியும் தார்மீக ஜீவனும்
பூத்தவர் பாரத புங்கவர் தம்மைநாம்
போற்றி செய்வோமே!

# இந்திய சரித்திரக் கும்மி.

## 1. பாரத பூமி

புன்னுகவராளி] [ஆதிதாளம்

தந்தன தனதனனு—தன
தகுந்தன தனதனனு....
சந்தத் தமிழினிலே-நம்
சரித்திரப் புகழ் பாடச்
சிந்தையில் வந்தருள்வாய்—நல்ல
செயந்தரும் பரம் பொருளே,
இந்தப் புவி மகிழ—நாங்கள்
இந்தியப் பெருமை சொல்லித்
தந்திமித் தோம் எனவே-கும்மி
தட்டிக் குதித்திடு வோம்....!
மாங்கனி வாய்க் குயிலே-நீல
மரகதப் பொன் மயிலே,
பூங்கிளியே மானே—இன்பப்
பொன்மணி யாழுடனே,
தீங்குழல் மத்தளமும்-தீம்தீம்
தீம் என முழங்கிடவே,
நாம் குதித் தாடிடுவோம்—தேச
நன்மையைப் பாடிடு வோம்....
முத்தமிழ்த் தென்றலிலே—நமது
முந்நிறக் கொடி பறக்கத்
தத்து திரைக் கடலில்-கப்பல்
தவழ்ந்துபொன் மணி கொழிக்க,
வித்தகக் கலை வாணர்—ஜய
வீரர் பல்லாண் டெடுக்க,
உத்தமர் தொண்டு செய்யத்—திரு
வோங்குயர் நாடிதுவே....

## எல்லை

பேஹாக்] [ரூபகதாளம்

முப்புறம் ஆழி முரசடிக்கும்–கன்னி
முனைக்கும் கௌரி முடிக்குமிடை,
எப்புறம் பார்த்தாலும் இன்பந்தவழ்ந்திடும்,
இந்திய நாடெங்கள் சொந்த நிலம்;

வானம் அளாவும் மலைகளிலே–நதி
வளர்க்கும் பச்சை வனங்களிலே,
தேனுங் கனியும் தெவிட்டாது கொட்டிடும்
தேசமிதே, திரு வாசமிதே!

## மலைகள்

வெள்ளிப் பனிமலை, ஹாலாய், சுலைமான்,
விந்தியம் மேற்குக் கிழக்குத்தொடர்,
துள்ளும் அருவிகள் தோத்திரம் பாடிடத்
துலங்கும் குறிஞ்சிநன் னடிதுவே....!

## ஆறுகள்

கங்கை, யமுனை, பிரம்ம புத்ரா,–சிந்து
காவேரி, வைகை, பொருநை, பெண்ணை,
துங்கை, கோதாவரி, கிருஷ்ணா, மகாநதி,
சுரக்கும் மருதநன் னடிதுவே....!

## மொழிகள்

ஆரியம், செந்தமிழ், ஆங்கிலம், வங்காளம்,
ஆந்திரம் கன்னடம் இந்தியுடன்
மாரதங் கேரளம், கூர்ச்சர மாம்பல
வாக்குகள் வாழ்த்திடும் நாடிதுவே!

## கவிகள்

வேத வியாசர், சுகருடன் வால்மீகி,
வேதாந்தச் சங்கரர் காளிதாஸன்,
வாதவூரார் திரு வள்ளுவர் கம்பர்,
வரகவி பாடிய நாடிதுவே....!

### மாகாணங்கள்

செல்வத் தமிழகம், ஆந்திரம், கன்னடம்,
சேரம் மராடியம் சிந்து வங்கம்,
பல்வளக் கோசலம், பாஞ்சாலங் கூர்ச்சரம்,
பாங்காக நேபாளம் பாருமம்மா....!

### ஊர்கள்

செஞ்சி திருப்பதி, சென்னை திருச்சி,
சிதம்பரம் காஞ்சி திருவரங்கம்,
தஞ்சை மதுரை, மைசூர், திருவாங்கூர்,
தனமிகு கோவையும் பாருமம்மா!

காசி, குருநிலம், கல்கத்தா டில்லியும்
கான்பூர் லக்னோ கயா பூரியுடன்,
நாசிகை, பூனா, நகரம் பல கண்டு,
நல்ல கலைச்செல்வங் கொள்வோமம்மா!....

எட்டுத் திசையும் எழிலோங்கும்-இதன்
இயற்கை யெங்கும் அழகுமயம்....
பட்டண மெல்லாந் தொழிலோசை-அங்கே
பாட்டுடன் வேலை பழகிடு வோம்....

எண்ணப் பரவசம் ஆகுதம்மா—இதை
இசைத்தாற் கவலையும் போகுதம்மா
விண்ணின்பம் வந்துள்ளே தாக்குதம்மா—எங்கும்
வேதவொலி நம்மை ஊக்குதம்மா....!

### மரபுகள்

தெருக்குத் தெருவாம் திருக்கோயில்—இங்கே
திண்ணைக்குத் திண்ணை திருப்பாடல்;
உருக்க ளெல்லாம் கலைச்சிகரம்—இதன்
ஊர்களெல் லாம் பெரியார்களம்மா!

செந்தமிழ்ப் பாண்டியர், சேர சோழருடன்
தெலுங்கர் பல்லவர் ஒசலரும்,
சந்திர சூரியர் மோரியர் குப்தரும்,
தருமந் தாங்கிய நாடிதுவே....

வித்தகச் சித்தர் விதி வகுக்க–நல்ல
வேந்தர் செங்கோல் அற மேந்திடவே,
சத்திமிகு வீரர் காத்திடவே-இசை
தழைத்த பாரத நாடிதுவே....

எத்தனை ஞானிகள், எத்தனை பக்தர்கள்,
எத்தனை வெற்றி வினைவீரர்....,
எத்தனையோ கவி யோகிகள் வேந்தர்கள்,
இந்திர போகிகள் வந்தனரே....

தென்குமரிக் கண்டம்–எக்காலம்–வெள்ளிச்
சிகரங் கண்டதும் எக்காலம் !
தொன்மை நிறைந்து துலங்குமிப் பாரதம்
தொல்லுகத்தொடுந் தோன்றியதே....

முன்னிங் கிருந்தவர் செந்தமிழர்–அவர்
முற்றுமித் தேசத்தைப் பெற்றிருந்தார் ;
பின்னிங்கு வந்தவர் ஆரியர், சோனகர்,
பின்னிக் கொண்டார் அவர் இந்நிலத்தே....

ஆரிய திராவிடச் சண்டையில்லை–இனி
ஆத்தும நேயர் அனைவருமே ;
பாரத நாடெல்லாம் ஓர்குலமே-அதன்
பாக்கிய மெல்லாம் பொதுநலமே !

அந்தண்மை வீரம் அறிவு, கலை தொழில்
ஆகுமெல் லோர்க்கும் பொதுவுடைமை ;
இந்தியருக்குள் இறைவனுந் தோட்டியும்,
ஏகக் குடும்பத்தின் பாகமென்போம் !

## 2. தமிழர் வரலாறு

ராகம்-செஞ்சுருட்டி] [தாளம்-திரிபுடை

தன்னன–தானன தானன தனை
தன்னன தானனை–தங்கமே
தனதன தானனை....

## 4. பௌத்த இந்தியா.

புன்னுகவராளி] [ஆதிதாளம்

தன்னன தானனனு—தன
தன்னன தானனனு,
தன்னன தானனனு—தன
தன தன தந்தனனு....

ஆருயிர்க் கருணையினுல்—சகியே,
ஆவி துடிதுடித்தே,
பேருபகாரஞ் செய்த—புத்தன்
பெருமையை யார் அறியார்?

சித்திர மாளிகையும்—சகியே
சிங்கார வாழ்வினையும்,
பத்தினி தோளினையும்—அவன்
பட்டெனத் துறந்து சென்றான்.

அரசடி வீற்றிருந்தே—நாளும்
அமைதியாய்த் தியானம் செய்தே,
நரசமு தாயத்திற்கே—ஒருபெரு
நல்வழி கண்டெடுத் தான்....

அகந்தையைச் சுட்டு விட்டால்—பே
ராசையை விட்டு விட்டால்,
சுகம் பெறலாம் எனவே—ஞானச்
சுடர்மணி முரசடித்தான்.

சாதிச் செருக்குமில்லை—வீண்
சடங்குகள் யாவு மில்லை;
போதியின் ஜோதியிலே—இந்தப்
புவியெல்லாம் வாழ்ந்திட லாம்....

தருமத்தைப் பரப்பிடவே—புத்த
சங்கம் உலகமெல்லாம்,
ஒருமனத் துறவிகளால்—நன்ருய்
ஓங்கி வளர்ந்ததுவே....

ஐம்பது கோடி மக்கள்—புத்தன்
அறவழி வாழுகின்றார்....
பண்புடன் புத்த மதம்—இந்தப்
பாரெல்லாம் பரவியதே....

மகாவீரர்

துறவினிற் பெரியவனும்—மனத்
தூயன் மகா வீரன்....
அறநெறிச் செல்வனவன்—எங்கும்
அஹிம்ஸையைப் பரப்பி வந்தான்.

அமைதியாய்த் தவம் புரிந்தே—அவன்
அருகனாய் மிகப் பொலிந்தான்....
சமவசரணம் அமைத்தே—தரும
சாதனத் தொண்டு செய்தான்....

## 5. சந்திர குப்த ராஜ்யம்—அலெக்ஸாந்தர்

நந்தரின் ஆட்சியிலே—நாம்
நலமுற வாழ்ந்திருந்தோம் ;
வந்தனன் அலெக்ஸாந்தர்-நம்
வாளுடன் வாள் தொடுத்தான்.

அடிக்குநல் லடி கொடுத்தே—நாம்
அமர்செய்த வேளையிலே,
கொடிய துரோகி வழி-காட்டிக்
கொடுத்தனன் பகைவருக்கே....

அன்னியரை வணங்கும்-வீண்
அலிகளைப் புறமொதுக்கி,
முன்புரு ஷோத்தமனே,—பகை
முறிந்திடப் போர் புரிந்தான்.

கிரேக்கர்கள் சில காலம்—இங்கே
கீர்த்தி நிருபருடன்,
ஆக்கிர மித்துக் கொண்டே—நாட்டை
ஆண்டிடப் போட்டி யிட்டார்....

## சந்திர குப்தன்

சந்திர குப்தனையே—போற்றிச்
சாணக்ய னெனும் புலவன்,
தந்திர மந்திரியாய்ப்—பெரும்
சமர்செயத் தூண்டி விட்டான்.

## சாணக்யன் உபதேசம்

"நாசஞ்செய் நந்தர்களால்—அறம்
நலிந்தது சந்திரனே....
தேசத்தைக் காத்திடவே—வீரத்
தீயெனக் கிளம்பிடுவாய்....

பிறரிடம் பிடிபட்டால்—நம்
பெருமை அழிந்து போகும்;
அறிவுடை ஆண் மகனே—முன்னால்
அறச்சமர் புரிந்திடுவோம்....

நடைகெடு பேடிகளால்—இந்த
நாடு தளர்ந்ததையா....
படையெடு, பலவானே—தீய
பகைவரை நொருக்கிடவே....

தாயினை இழிவுறுத்தி—நமது
தருமத்தைப் புறக்கணித்தே,
நாயென வாழுவதோ?....இங்கே
நரி புலி யாளுவதோ?...."

தந்திரச் சாணக்யன்—இவை
சாற்றிடச், சமர்முறுக்கிச்
சந்திர குப்தனங்கே—பகை
சாய்ந்திட முடி தரித்தான்.

எதிர்த்த செலுக்க செனும்—பெரும்
யவனனை முறியடித்தே,
புது மௌரிய வமிசம்—இங்கே
புகழுற நாட்டி விட்டான்.

வீரத்தைக் கண்டதுமே—பகை
வேந்தர் பணிந்து விட்டார்—இவன்
பாரசி கம் வரையில்—கொடி
பறந்திடப் புரந்தனனே !

சௌரியமும் திருவும்—ஜய
சக்தியும் பெருகி வரும்
மௌரியர் மாண்புகளை—அன்று
மகஸ்தனீஸ் எழுதி வைத்தான்.

மன்னுயிர் தன்னுயிராய்—குப்த
மன்னவன் ஆண்டரசைத்
தன்மக னுக் களித்தே—ஜைன
தருமத்தை மிக வளர்த்தான்.

தெளிவுறு துறவிகளால்—சமணம்
தென்புறம் பரவிடவே,
வெளிகுள மலையினின்றே—இவன்
விரதங்கள் காத்திருந்தான் !

நீண்டபல் லாண்டுகளாய்—இங்கே
நிலவிய பிற மதத்தைப்
பாண்டியன் சுரந் தவிர்த்த—ஞானப்
பாலகன் வென்று விட்டான்.

அப்பரின் அருள் வலியால்—உள்
ளன்பரின் அருட் பணியால்,
முப்பொரு ளுண்மையினுல்—இங்கே
முகிழ்த்தது சிவ மணமே....!

---

° (குறிப்பு) இதை சிரமண பௌகோளா அல்லது வேள்குளம் என்பர். இது மைசூரில் உள்ளது 7000 சமணத் துறவிகளுடன் சந்திரகுப்தன் மதப் பிரசாரம் செய்து, இறுதியில் 20 நாள் உபவாசம் இருந்து இறந்தான். சமணர், சந்திர குப்தனைச் "சேடக ராஜன்" என்பர்.

## 6. அசோகன்.

சந்திர குப்தன் மகன்—பிம்பி
சாரன் புகழ் சிறந்தான்.
வந்தனன் அவன் மகனும்—அசோகன்
வளர்பிறைச் சந்திரன் போல்.

வலிமிகு வாலிபத்தில்—பெரு
மல்லனிவன் படையால்
கலிங்கத்தை வென்றதுவும்—போர்க்
களத்தினைப் பார்த் தயர்ந்தான்.

எத்தனை பேரைக் கொன்றேன்—அந்தோ
ஏதுக்கிவ் வெறி யெனவே
கத்தியை விட்டெறிந்து—புத்தர்
கருணையைச் சரண்புகுந்தான்.

பொன்னி வளவனைப்போல்—ரோமா
புரியின் அகுஸ்தனைப் போல்,
மன்னுயிர் தன்னுயிர் போல்—எண்ணி
மன்னறங் காத்து வந்தான்.

பங்க ளூரிலிருந்து—வடக்கே
பலுசிஸ்தானம் வரையில்
செங்கோல் செலுத்தி வந்தான்—புவி
செழித்திடத் திருவுடனே.

சிங்களம் சிங்கநகர்—தெற்குத்
தீவுகள் சீனம் ஜப்பான்
எங்குமே புத்தமதம்—பரவி,
எழில்பெறத் தொண்டு செய்தான்.

பாரசீகம் யவனம்—ரோம்கிரீஸ்
பண்டை யுலக மெல்லாம்
வீரத் துறவிகளால்—அற
விளக்கினை ஏற்றி வைத்தான்.

தரும ஜோதியாலே–இவன்
சகத்தினை வென்று விட்டான் ;
கரும வீரனுனன்–அசோகன்
கருணைச் சாது மன்னன்....
நாட்டி லெங்குந் தூண்கள்–மிக
நாட்டிநல் லுரைதீட்டி-வழி
காட்டி விளக்கெனவே-வாழ்வுக்
கப்பலை நடத்தி வந்தான்.
எந்த வேளையேனும்–வாரீர்....
இடர்ப்படு மாந்தரெல்லாம்
வந்து நன்மை பெறுவீர்-என
வாசகம் பரப்பினனே....
உண்ணு கின்ற போதும்-அவன்
உறங்கு கின்ற போதும்
நண்ணு மாந்தர் துயரை–எந்த
நாளும் தீர்த்து வைத்தான்
உண்மை பேசிடுங்கள்–பிற
உயிரை நேசியுங்கள்
நன்மை செய்திடுங்கள்–தூய
ஞானம் போற்றிடுங்கள்.
தருமங் காத்திடுங்கள்-அன்ன
தானம் செய்திடுங்கள்-உயிர்க்
கருணை பேணிடுங்கள்-பொதுக்
கடமை காத்திடுங்கள்.
கொலை புரியவேண்டாம்-பிறரைக்
கொள்ளை யடிக்க வேண்டாம்
கலகஞ் செய்ய வேண்டாம்–மாதரைக்
கற்ப ழிக்க வேண்டாம்.
தன்னுயிரைப் போலே–பிறர்
தம்முயிரைப் பேணீர் ;
இன்னல் செய்திடாதீர்-''என்றே
எழுதி ஆணையிட்டான்.

பிறருக் கென்று வாழ்ந்தான்—புத்த
பிக்ஷுவாக வாழ்ந்தான்
அறத்திற்கென்று வாழ்ந்தான்—அசோகன்
அன்பு மன்ன னுென்.

சுதந்தரத் தமிழகத்தில்—புத்தத்
துறவிகளும் புகுந்தார்—அந்த
மதத்தினர் இலங்கையிலே—அசோகன்
மகளை யுபசரித்தார்.

போதிக் கிளை வளர்த்தார்—எங்கும்
புத்த மதம் வளர்த்தார்
மாதவி மகளு மிங்கே—புத்தர்
மலரடி தொழுதனளே....

மணித்திரு வாசகனுர்—புத்த
மதத்தினை வாதில் வென்ருர்.
தணிந்தன பிற மதங்கள்—சிவந்
தழைத்தது தமிழகத்தில்.

அக்கக்கா, கேள் கதையை—நம்
அசோக னுக்குப் பிறகு
சக்கரச் சுழல் போலே—அரசின்
சரிதையும் மாறியதே!....

## 7. இந்து மன்னர்

இராகம்-கேதாரம்] [தாளம்-ஆதி

தன்னன தன தனனு—தன
தன்னன தன்னன தானனனு—தன....

காலச் சுழலினிலே—இந்தக்
காசினி வாழ்வொரு
தூசியாய்ப் போகுதே—அதன்
கோலத்தைப் பார் முன்னே—மயூரக்
குலநலங் குலைந்தொரு
கொலையினில் முடிந்தது....

(£ சங்கமித்ரை)

தளபதி புஷ்ய மித்ரன்–பிருஹத்ரதன்,
தலையினைச் சீவித்தன் சங்க மரபினை
வளம்பெற நாட்டி விட்டான்–அவன்
மகன் அக்னிமித்ரனும் புகழ்சிறந்தான்....

சிங்கம்போல் ஆந்திரர்கள்–வீரச்
சிமுகனின் தலைமையில்
செயக்கொடி நாட்டியே,
சங்கரை முறியடித்தார்–இவர்
சதவாகன மரபை
இத்முற நாட்டினுர்....

ஆண்டுகள் ஐநூறு–நாட்டில்
ஆந்திரர் ஆண்டனர்
அன்னவருள் சக்தி
பூண்ட புலமாயி–சதகர்ணி
பொலிந்தனர் நலம்பல
புரிந்தனரே....

பிளீனியும் டாலமியும்-தென்னுட்டுப்
பெருமையும் உரிமையும்
அருமையும் பேசினர்....
அளிமிகு செல்வமுடன்–கலை
யமுதமும் குலவினர் தமிழரென்றே....

கலிங்கத்துக் கரவேலன்-மிகக்
கடுமையாய் மகதரைக் கவிழ்த்துவிட்டான் ;
வலிமிகு தானவர்கள்-சில
வருடங்கள் ஆண்டனர் பெருமிதமாய்....

துங்கத் தமிழரசர்-வீரத்
தோள்புடைத் தெழுந்துல காண்டனரே
சங்கத் தமிழரசர்-இந்த
சகத்தினிலே–புது யுகத்தினை நாட்டினர்.

தொல்லை தரும் உலகம்-இதைத்
துறப்பது மறப்பது சிறப்பதுவே யென்ற
பல்லவி பாடிக் கொண்டே-சிலர்
பாமரர் உள்ளத்தை மாற்றிவிட்டார்.

மன்னுலக வாழ்வைப்-பொய்
மலடி மகன்எனும் வாயடித் துறவினால்,
தன்னுறுதி இழந்தே-பிறர்
தயவினில் வாழ்ந்திடும் தாதர்களாயினர்....

வாழுந் திறனிழந்தார்-இந்தியர்
வந்தவர்க் கெல்லாம் வணங்கியே மாந்திங்கு
தாழு நிலை யடைந்தார்-பிறர்
தந்திரம் பறித்தது சுதந்தர உரிமையை....

எத்தனை படையெடுப்பு-நம்மை
எத்தனை அன்னியர்
சொத்தையென் றெண்ணியே,
சித்திர வதைசெய்தார்-அவரைச்
சீறிப் புடைத்திடும் வீறு வேண்டுமடா!

## 8. கனிஷ்கன்.

யூனானி ஆரியரும்-சீனரும்
ஊணரும் சகருடன் பகலவரும்
சேனைகள் கொண்டு வந்தார்-அவரைச்
செயித்தனர் நம்மவர் செருக்களத்தே....

உச்சினி விக்கிரமன்-சகரை
உக்கிரப் போரிலே தொக்கியழித்தனன்.
மெச்சுற வெற்றி பெற்றே-நாட்டிய
விக்கிரம சகத்தை நாமறிவோம்-தோழீ....

சாலிய வாகனனும்-பாஞ்
சாலத்திற் சகர்முதல் அன்னியரை,
வேலினால் வேர் பறித்தே-ஒரு
வியன்பெறுஞ் சகத்ினை விளக்கிவிட்டான்.

காந்தாரத் திலிருந்து–மகதம்வரை
கனிஷ்கக் குஷானனும் ஆண்டு வந்தான்.
வேந்த னிவன் பெருமை–புத்த
விளக்கொளி போலெங்கும் விளங்கியதே....

தேவ புத்திரன் என்னும்–இந்தத்
திருவுடை மன்னவன் செகமுழுதும்,
ஆவலாய்ப் புத்தமதம்–பரவவே,
அறவோரை ஆதரித் தனுப்பி வைத்தான்.

அஸ்வகோஷன், சரகன்–முதல்
அறிஞரும் கவிஞரும் கலைஞரு மலிந்தனர்;
விஸ்வ வித்யாலயங்கள்–கண்டு
வியன்கலை போற்றிய வேந்தனிவன்;

கல்வியுந் தொழில்வளமும்–மிகக்
கண்ணிய மாகிய புண்ணியமும் பெருகி,
எல்லாரும் இன்புறவே–ஆண்ட
இந்திய மன்னரை வந்தனை செய்குவோம்....!

## 9. குப்தரும், வர்த்தனரும்.

ஆரிய குப்தர்களின்–வீர
அரசருள் அரசனாய் அசுவமேதம் செய்த
தீரன் சமுத்திர குப்தன்–நாட்டைத்
திக்விஜயம் செய்து சிறப்புடன் ஆண்டான்....

சந்திரன், குமரன், கந்தன்–புதன்
ததா சுதன், பானு குப்தர்களுமே,
சந்ததி பரம்பரையாய்–இங்கே
சரித்திரப் புகழ்பெறச் சகம்புரந்தார்.

இரத்த வெறிபிடித்த–ஊணர்
இகல்செய்ய வந்தனர்,
பகலின்முன் இரவென;
உரத்த படைவலியால்–குப்தன்
ஊணரின் செருக்குகள் வீணுற ஓட்டினான்.

மீண்டும்வந் தூன்றிக்கொண்டே-ஆண்ட
மிகிரா குலன்மரபும் மிஞ்சவில்லை;
தூண்டிய வீரவொளி-நந்
தொல்பெரு நாட்டினை வல்லர சாக்கியதே.

சில்லரை அரசர் பலர்-இங்கே
செயமுர சடித்தனர் சிலகாலம்-பின்னே
தொல்லைகள் பலகோடி-நம்மைச்
சுற்றிலும் ஒற்றுமை யற்றசிற் றூர்களே!

வரகவி பாணன் சொலும்-ஹர்ஷ
வர்த்தனன் சக்கிர வர்த்தியெனப்
பிரபலமாய் ஆண்டுவந்தான்-பகை
பிறகிட வெற்றிகள் பிறங்கிடவே....

தன்பொருள் அனைத்தினையும்-கலை
தழைத்திட ஹர்ஷனுந் தானஞ்செய்தான்;
இன்னிசை நாடகங்கள்-மூன்றை
எழுதிநல் இலக்கியப் பணிபுரிந்தான்....

பாகியன் இயன்சங்கெனும்-இரு
பண்டிதச் சீனர்நம் பாரத நாட்டினை
ஏகமாய்ப் புகழ்ந்ததனைச்-சகியே,
இன்னமும் படிக்கலாம் பொன்னெழுத்தாலே....

கலைகளைச் சொல்லிடவோ?-நம்
காளிதாச கவியைச் சொல்லிடவோ!....
விலையில்லா ஞானவெள்ளம்-இந்த
வித்தக நாடெங்கும் விளங்கியதே-

கதிரவன் ஒளியினைப் போல்-எங்கும்
கல்வியும் கலைகளும் கண்டிருந்தோம்....
நிதிமிகு தொழில் வளமை-இங்கே
நிலத்திலுங் கலத்திலும் நிறைந்ததம்மா;

---

(*பாணனின், "ஹர்ஷ சரித்திரம்")

(குறிப்பு: ° ஹர்ஷன் இரத்தினவளி, நாகானந்தம், பிரியதர்சிகா ஆகிய மூன்று நாடகங்களை எழுதினன்.)

சத்திய சந்தர்களாய்-ரிஷி
தருமத்தைப் பாலித்த இந்தியர்கள்,
ஒத்தொரு குலமெனவே-ஆன்ம
ஒருமையில் வாழ்ந்ததன் அருமையைப் பார்.

## 10. இஸ்லாம் இந்தியா

(1055) ஆண்டுகள், இஸ்லாமியர் ஆட்சி நடந்தது. இஸ்லாமியர் நம்மவருள் பிரிக்கமுடியாமல் நிலைத்து விட்டனர், கஜினி, கோரி, லோடி, கில்ஜீ, துக்ளக்—முதலிய பட்டாணியரும் முகலாயரும் இந்தியாவை ஆண்ட நாட்களில் நமக்கெய்திய நன்மைகளை மட்டுமே இங்கே சொல்ல முடியும். இந்தியாவிற்கு இந்துஸ்தானி பொதுமொழியானது. நடனம், சிற்பம், கீதம், சித்திரம்—ஆகிய கலைகள் இஸ்லாமியர் ஆட்சியில் நல்ல வளர்ச்சி பெற்றன. அக்காலம் எழுந்த கவிகளும், பாடல்களும், சிற்பச் செல்வங்களும் இன்னும் உலகில் ஒப்புயர்வற்று விளங்குகின்றன. அக்பரும், தாஜ்மகாலும் இஸ்லாமிய அரசின் சிறந்த வெற்றிச் சின்னங்கள். இஸ்லாமியர் நமது வேதக் கலைகளையும் பார்ஸியில் எழுதியிருக்கிறார்கள். உதாரணமாக, 'தாரா' என்பவன் உபநிஷத்தை மொழிபெயர்த்தான்; அவன் சிறந்த வேதாந்தியாக விளங்கினான்.)

இராகம்-காம்போதி] [தாளம்—ரூபகம்.

தன்னன தானதன
தனனதன தானா....

அல்லாஹு அக்பரென்றே
அரபிநாட்டில் எழுந்தே,
அல்குரானைத் தந்தநபி
அருள்பழுத்த வீரர்;
இத்தலத்தை வென்றிடவே,
ஈமான்கொண்ட பேரைச்
சக்திபெற்ற இஸ்லாமியச்
சங்கமெனச் செய்தார்.
மதமுடனே அரசியலை,
வளரும்வகை செய்தே,
பதமுடனே கலிபாக்கள்,
பாதுகாப்பில் அமைத்தார்.

அபுபக்கர், உஸ்மான், உமார்
ஆலி முதல் அன்பர்
நபிமணியின் வாக்கை இந்த
ஞாலமெல்லாம் விதைத்தார்.

பண்புடனே கலிபாக்கள்,
பாக்தாதில் அமர்ந்தே,
எண்டிசையும் குரான் ஷெரீப்
எதிரொலிக்கச் செய்தார்.

கிழக்கினிலும் மேற்கினிலும்
கிளர்ந்தெழுந்த இஸ்லாம்,
வழக்கமாக வென்றுகொண்டே,
வந்ததுநம் அருகே....

சிக்கந்தர் வந்தவழி
சிந்துநதிக் கரையில்,
இக்கணமே இபின்காசிம்
இஸ்லாம்கொடி நட்டான்.

கஜினி வந்தார், கோரி வந்தார்,
கனகமலை குவித்தார் ;
அசனிபோலச் சோமநாதர்
ஆலயத்தைத் தகர்த்தார்.

அல்தாமஷ் மண்வெறியால்,
அமர்க்களங்கள் செய்தான்.
கில்ஜியுடன் துக்குளக்கர்
கிளர்ச்சியுடன் ஆண்டார்.

மன்னர்மணி அல்லாவுதீன்
மகிமைபெறப் புரந்தான் ;
தென்னிசை வாணரை யழைத்தே,
தேனிசையை வளர்த்தான்.

சந்துபீபி ஆண்டபின்பு
சரித்திரமே மாறி,
வந்த முகலவர் நம்மை
வரிசையாகப் புரந்தார்.

பலமிகுந்த பாபருடன்
பரிவுள்ள உமாயூன்
நலமிகுந்த அக்பர் இந்த
ஞாலப்புகழ் பெற்ருர்.

இந்து முஸ்லீம் ஒற்றுமையும்
இனியசம ரஸமும்,
சிந்தையுயர் கலைவளமும்
செழித்ததிவர் அரசில்.

துன்பமுற்ற குடிகளுக்குத்
தொண்டு செய்ய வருவான்
அன்புடனே அறம் வளர்த்தான்
அவனிபுகழ் அக்பர்....

ஷாஜஹானின் மயிலணையுந்
தாஜ்மகால் அழகும்
காசியினில் கண்கொள்ளாக்
காட்சியெனச் சொல்வோம்.

அல்லாவிடம் அன்புமிகும்
அவுரங்க ஜீபு,
குல்லா செய்து, குரானெழுதிக்
கொள்கையுற வாழ்ந்தான்.

வரிவரவைக் குடிகளுக்கே,
வழங்கி நலம் புரிந்தே
அரிய தூய எளிய வாழ்வில்
ஆலம் கீர் வாழ்ந்தான்....

இத்தகைய பெருமைமிகும்
இஸ்லாமிய மன்னர்,
சித்திரமும் இசைக்கலையும்
சிற்பமுடன் வளர்த்தார்.

அந்நாளில் அவரளித்த
அரசியலின் ஒழுங்கே,
இந்நாளும் வழங்குவதை
இந்துஸ்தானிற் காண்போம்.

இச்சமயம் துள்ளிவந்த
இந்தியரின் வீரம்
அச்சமறப் போர்புரிந்த
ஆண்மையினைக் காண்போம்....

## 11. பாரத வீரர்.

(இந்தியாவின் வீரச்சுடர் என்றும் தணிந்த தில்லை; காலத்திற்கேற்ற உருவுடன் அது விளங்கியது. இக்காலம் இராஜபுத்திரர், மராட்டியர், சீக்கியர் ஆகிய மூன்று வீர ச்முதாயத்தார் எழுந்தனர். இவர்களுடைய வீரக்கனலைத் தூண்ட, அருட்கவிகளும் குருமார்களும் புதிய உணர்வுடன் எழுந்தனர். துளசிதாஸ், ராமதாஸ், துகாராம், கபீர், நானகர், மீராபாய், ரவிதாஸ், முதலிய கவிகள் பக்திரஸப் பாடல் களால் இந்துதர்மத்தைப் பிரசாரம் செய்தார்கள். கபீரும் நானகரும் இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காகப் பாடிப் பணி செய்தனர். மேவாரில் மீராபாய், கண்ணனைப் பாடினள். அவள் குலத்தில் வந்த, ராணு பிரதாபசிங்கன் கடுமையான வீரத்தவம் புரிந்து சுதந்திரப் போர் நடத்தினன். நானகர், தியாகவீரரைச் சிருஷ்டித்தார்; இவரைத் தொடர்ந்து பத்து குருமார் வந்தனர். அவருள், ராமதாஸும், தேஜ் பகதூரும் குருகோவிந்த சிங்கனும் ஒப்பற்ற தியாக தீரர்கள். குரு கோவிந்தன், அகாலிகளை ஆக்கித் தேசசுதந்திரத்திற்காகப் போர் புரிந்தான். மகாராஷ்டிரத்தில் சமர்த்தகுரு இராமதாஸ் எழுந்து பக்தியும் வீரமும் தூண்டினர். அவர் சிஷ்யன் சிவாஜியே, இந்திய வீரருள் மிகச்சிறந்தவன். அவன், தர்மாவேசங்கொண்டு, புதிய இந்து ராஜ்யத்தையே நிலை நாட்டினன். சிவாஜிக்குப் பிறகு அவன் மந்திரிகளான, பேஷ்வாக்கள் எழுந்து நாட்டைக் காத்தனர். இச்சமயம், இஸ்லாம் ஆட்சி மறைந்து, ஆங்கிலக்கொடி மெல்லத் தலை நூக்கியது.)

### பாரத நாடு

இராகம்-காபி] [தாளம்-ஆதி

தன்னன தானனனு-தன தனு
தன்னன தானனனு....
தன்னன தானனனு-தன தன
தன்னன தானனனு....

பாரத நாட்டினிலே—கலைப்
பண்பு குறைந்திடுமோ?
வீரங் குறைந்திடுமோ?—சுதந்தர
வேட்கை குறைந்திடுமோ?

பக்தர் எழுந்திருந்தார்-அருட்கவி
பாடிப் பணி புரிந்தார்;
சித்தர் எழுந்திருந்தார்—சகியே,
தீரரைத் தூண்டி விட்டார்.

துளசிதாஸ், துக்காராம்—போன்ற
தூய கவிமணிகள்,
உளஞ்சிலிர் பாடலினல்-மாந்தர்
உணர்ச்சியைத் தூண்டி விட்டார்.

கண்ணனின் கீதைமொழி—தனைக்
கருத்தினிற் கொண்டெழுந்தார்;
திண்ணிய ஜயவீரர்—தியாகத்
தீயினிற் குதித்திடவே!....

பக்திக் கலையுடனே—தெய்வ
பலமிகு சாதுக்களும்,
சத்திக் கலை வளர்த்தார்—பாரத
தருமத்தைக் காத்திடவே.

## ராணு பிரதாப் சிங்

ஜெயஜெய பவானி என்றே—ப்ரதாப
சிங்கன் எழுந்திருந்தான்.
பயமறப் படைநடத்தி—பகை
பதறிடப் போர் புரிந்தான்.

வறுமை வாட்டிடினும்—இடர்மிக
வந்து நெருக்கிடினும்,
சிறுமையை நாடாது—தேச
சேவைக் குயிர் கொடுத்தான்.

பில்லர் படையுடனே—தில்லிப்
    பெரும்படையைக் கலக்கி....
ஹல்திக் கட்டத்திலே—பகைவர்
    அலறப் போர் புரிந்தான்.

காடு மலைகளிலே—புலி
    கரடிக ளின் இடையே,
நாடு விடுபடவே—உயிர்
    நல்கிச் சமர் புரிந்தான்.

பாரதத் திரு விளங்கக்—காட்டுப்
    பச்சிலை பசிக் கடைத்தும்,
வீரத் தவம் புரிந்த—சிங்கன்
    வெற்றி முரசடித்தான்.

## 12. வீர சிவாஜி

(வீரசிவாஜி உலகவீரருள் ஒப்புயர்வற்றவன். ஸீசர், நெப்போலியன், சிக்கந்தர், அனைவரும் தமது நாட்டைக் கவனிக்காமல், அன்னிய நாடுகளைப் படையெடுத்து வாள் வரிசை மட்டும் காட்டிக் கொன்று குவித்துச் சென்றனர். அவர்களுக்குப் பிறகு வாள்வெற்றி நிலைக்கவில்லை. மூவரும் பரிதாபமாக இறந்தனர். சிவாஜியின் வாள் பாரத தர்மத்தையே காத்தது. பாரத சாம்ராஜ்யத்தை நாட்டியது; சிவாஜி இராமதாஸர் உபதேசம் பெற்ற பக்தனாக, ராஜரிஷியாக வாழ்ந்தான். அவனைப் போன்ற வீரன் உலக சரித்திரத்தில் இல்லை.)

இராகம்-செஞ்சுருட்டி] [தாளம்-ரூபகம்

தானன தானன—தனதன
    தானன தானன—தனதன
தானன தானன—தனதன
    தானன தானன....

வீர சிவாஜியென்றால்—சுதந்தர
    வேகம் பிறக்குதம்மா...
பாரினில் யார் சிறந்தார்?—இந்த
    பாரத வீரனைப் போல்....

113375
ஓ-, SKMS..., N64

தேச விடுதலைக்கே—எழுந்த
சிங்க மிவன் பெயரை
ஆசை யுடன் கேட்கும்—அலிக்கும்
ஆண்மை பிறக்குதம்மா....
புலிக ளும்பணியும்—பகைப்
புயல்க ளுந் தணியும்.
வலிய வாள்பிடித்த—சிவாஜி
வாசி நடத்தி வரின்.
பையற் பருவத்திலே—வீரப்
படை நடத்தி யிவன்,
நையப் புடைத்து வென்றான்—பகைவரை
நாடு புகழ்ந்திடவே.
தவக் கனல் அளித்த—ஸ்ரீராம
தாஸானு தாஸனவன் ;
சிவக் கனல்போலே-அடிமைச்
சிறையைச் சுட்டெரித்தான்
தேவி பவானி சக்தி-துணையால்
தேசந் தலை நிமிர,
ஆவியைத் தந்து மிவன்-சகியே,
ஆயிரம் போர் புரிந்தான்.
நெஞ்சகத் தூயவரை—மிக
நேய முடன் காத்தான்—நய
வஞ்சகக் கும்பல்களை-இவன்
மண்ணி லுருட்டி விட்டான்.
வேடப் பகைவர்களை—மாறு
வேடம் புனைந்தழித்தான் ;
காடு மலைகளிலே-அரண்
கட்டிச் சமர் புரிந்தான்.
தில்லிச் சிறையினின்றே—தப்பிச்
சிவத் துறவியைப் போல்
மெல்லப் பதுங்கி வந்தே—சிங்கம்
மீண்டுந் தலை நிமிர்ந்தான்.

வீர மராடியனை—டில்லி
வேந்தனும் பாராட்டி,
“ஆரிய சத்ரபதி—வாழ்கநின்
அரசுரிமை” என்ருன்.

தேச விடுதலைக்கும்—தரும
தேவி விடுதலைக்கும்
பாசமுடன் உழைத்தான்—அவன் பெயர்
பல்லாண்டு வாழியவே....

வேதக் கலை வளர—பாரத
வீரக் கலை வளர—குரு
போதக் கலை வளர-சிவாஜி
புண்ணியத் தொண்டு செய்தான்.

பத்திலொரு கடமை—வாங்கி
பகுத்து நன்மை செய்து,
உத்தமர்கள் போற்ற—சிவாஜி
உலகில் அறம் வளர்த்தான்.

பத்தினி கற்பினையும்—சாது
பசுவையும் வேதத்தையும்
பத்திசெய் கோயிலையும்-வீர
பலத்திஞல் ஆதரித்தான்.

தந்திரமும் திறமும்—நாட்டைத்
தாங்கும் பலமும் கொண்டு
மந்திரி மார்களிடம்—அரசை
மாண்புறத் தந்து சென்ருன்.

பாரத சக்திக் கதிர்—எங்கும்
பளிச்சிட வுயிர் கொடுத்த
வீர சிவாஜியினை எண்ணி•
வெல்லுவோம் வினையுலகை!

## குரு கோவிந்த சிங்கன்

(இந்திய தேசாபிமானிகளுக்கு ஆவேசம் அளித்த முன்னணி வீரன், குரு கோவிந்த சிங்கன். உலக வீரருள் கடுந்தவத்தால் சக்தி பெற்று ஒரு ஜாதியைப் படைத்து தனியே ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை எதிர்த்துப் போர் புரிந்தவன், குரு கோவிந்தன் ஒருவனே!)

கோவிந்த சிங்க னெனில்—தியாகக்
கொழுந்து வீசு தம்மா
ஆவியைப் பலி கொடுத்தான்—நாட்டில்
அறமகள் வாழ்ந்திடவே.

ஞான சிகா மணியாம்—அவன்
நல்ல குருமணியாம்
நானகனின் மரபில்—வந்த
நாயகக் கண்மணியாம்.

தீரத்திலே சிறந்தான்-வாழ்வைத்
தியாக பலியாக்கிப்
பாரத தர்மத்தினைப்-பரி
பாலிக்கப் போர் புரிந்தான்.

கடுந்தவ விரதமுடன்-யமுனைக்
காட்டிற் பல்லாண்டுகளாய்
விடுதலைக் கனல் வளர்த்தான்—அகாலி
வீரர்களைப் படைத்தான்.

தழங்கிடும் வீரமுடன்—தருமச்
சமர்மதப் புயலுடனே,
எழுந்திருந்தான் சிங்கன்—தேசம்
எழுந்த தவனுடனே....

ஆனந்தக் கோட்டையிலே—உலகம்
ஆச்சரி யப்படவே,
மானத்தைக் காத்து நின்றான்-பகை
மன்னர் புறந்தரவே....

நாட்டுக்கு வஞ்சனை செய்-பொல்லா
நாசத் துரோகிகளால்
கோட்டை யிழந்து மிவன்-மீண்டும்
குதித்துச் சமர் புரிந்தான்.
மக்கள் பலியானார்-வீர
மாணவரும் இறந்தார்-இன்னும்
உக்கிரப் போர் புரிந்தான்-குரு
உலகெங்கும் போற்றிடவே.
"பலேவீரன்" எனவே-டில்லி
பாதுஷா கைகுலுக்கி,
"சலாஹ்" என்ற பிறகு-கோ
தாவரிக் கரை வசித்தான்.
தியாகக் கனலினிலே-தெறித்த
தீப்பொறி மின்னலென
வேகமுள்ள குருவின்-சக்தி
வீரத்தை வாழ்த்திடுவோம்.
இத்தகை வீரர் குலம்-நம்
இந்திய நாட்டினிலே,
சத்தியப் போர் புரிந்தே-பாரத
தருமத்தைத் தாங்கி யதே.
முகலவர் அரசாட்சி-இத்துடன்
முற்ற முடிந்திடவே,
இகலவர் யாருமின்றி-இந்நாட்டை
இந்தியரே புரந்தார்.
சிவாஜியின் மரபினரே-மீண்டும்
தில்லி யினைப் பிடித்தார்;
அவர் கொடிதனை வணங்கி-இங்கே
ஆங்கில ரும் புகுந்தார்.
உத்தர பாரதத்தின்-சரித்திரம்
ஓதி முடித்துவிட்டோம்; இனி
வித்தகத் தென்னாட்டின்-கதையை
விளம்பிடக் கேள் சகியே....

## 13. தென்னுட்டின் பெருமை.

(வடநாடெல்லாம் அன்னியர் போர்க்களமாய், அடிமைப் பட்டிருந்த போது தென்னுட்டில் சுதந்தரக்கொடி ஆடியது. சோழர், பாண்டியர், பல்லவர்-மூவரும் இங்கே வீறுபெற் ருேங்கினர். மார்க்கோ போலோ, யவன சீனப் பிரயாணிகள் முதலியோர், தமிழர் பெருமையை எழுதிவைத்திருக்கிருர் கள். 14ம் நூற்ருண்டுமட்டும் தமிழர் சுதந்தரராகவே இருந் தனர்.)

இராகம்-பைரவி] [தாளம்-ரூபகம்

தன்னன தன்னன தானனனு—தன
தன்னன தன்னன தானுனு
தன்னன தன்னன தானுனு-தன
தன்னன தன்னன தானுனு....

தீந்தமிழ் பேசிடுந் தென்னுடே—இசைத்
தென்றல் பரவிடுந் தென்னுடே....
ஆந்திரர், கன்னடர், கேரளர் ஆதியோர்
அன்புடன் வாழ்ந்திடும் தென்னுடே....

வேதக் கலையினைக் காத்ததுவும்—ஜய
வீரக் கலையை வளர்த்ததுவும்,
நாதக் கலையிற் சிறந்ததுவும்—பர
ஞானக் கலைவளர் தென்னுடே!

வெற்றியரசர் விளங்கியதும்—போரில்
வீரச் செருக்குடன் ஓங்கியதும்,
கற்றுத் தெளிந்த கடவுட் புலவர்கள்,
கவிதை செய்ததுந் தென்னுடே....

அன்னிய ருக்கு வடநாடு—தோழி,
அடிமைப் பட்டுக் கிடக்கையிலே,
உன்னத மான உரிமைக் கொடியினை,
உயர்த்தி யாண்டதுந் தென்னுடே....

மிக்க மிடுக்குடனே புகுந்த–பகை
மேட்டிமை வேரறுத் தோட்டியவர்;
தக்கிண தேசத்து வீரரம்மா–அவர்
தருமப் போரிற்கை காரரம்மா....!

சளுக்கப் புலிகேசி வாழியவே-காஞ்சிச்
சைவ மகேந்திரன் வாழியவே!
வலுத்த ராஜராஜன் ராஜேந்திரன்–சடா
வர்மனும் வீரனும் வாழியவே!

பல்லவர் செய்வித்த சிற்பங்களும்–சோழ
பாண்டியர் செய்வித்த காவியமும்,
எல்லா வுலகமும் இன்னும் புகழ்வதை
இயம்பிக் கும்மி யடித்திடுவோம்!

(வேறு)

சிங்களம் சிங்கபுரம்–ஜாவா,
சீனமுடன் மணிலா
எங்கெங்குங் கொடிபறக்கத்-தமிழர்
இசை நல மோங்கியதே.

(வேறு)

சீனர் யவனரும் சோனகரும்-இந்தச்
செந்தமிழ் நாட்டுச் சிறப்புகளைத்
தேனமுத மொழி தேர்ந்துப் புகழ்ந்ததைச்
செப்பி முன்னேறிச் செயித்திடுவோம்.

முத்துக் குவைசெல்லும் கப்பல்களும்–துணி
மூட்டைகள் சென்றிடும் கப்பல்களும்,
வித்துப்பொன் கொண்டுறும்
கப்பல்களும்–வெற்றி
வீரர் முரசொலிக் கப்பல்களும்

குதிரைப் படைவரும் கப்பல்களும்–போரில்
குதித்து வென்றிடும் கப்பல்களும்,
மதுரைச் சாயவேட்டிக் கப்பல்களும்–தமிழ்
வலைஞர் சென்றுறும் கப்பல்களும்,

காணக்காணக் கண் குளிருதம்மா—இந்தக்
கன்னித் தமிழிசை என்ன சொல்வேன் !
பாணர் ஒருகோடி பாடினுலும், இன்னும்
பரந்து நிற்கும் தமிழிசையே....!

வெற்றி மிகுந்த விசய நகர்—நம்
வீறு மிகுந்த தமிழ்நாட்டைப்
பற்றிப் புரந்த தொருகாலம்—அந்தப்
பந்தனை சிந்திய தோர் காலம்.

வடுகர் சீர்த்தி மறைந்ததுவே—தமிழ்
மன்னவர் கொற்றமும் அற்றதுவே ;
விடுதலைக் கொடி வீழ்ந்ததுவே—இங்கே
வேறிருவர் வந்து சேர்ந்ததுமே....!

தில்லித் துருக்கரும் வந்தார்கள்—இங்கே
தீர மராடியர் வந்தார்கள் ;
எல்லாரையும் மிஞ்சி இங்கிலீஷ்காரர்கள்
ஏற்ற மடைந்ததைச் சாற்றுவமே....

## 14. கும்பினி இந்தியா.

(இந்தியா என்றல் நீண்டகாலமாக வெள்ளைக்காரருக்கு ஒரு கனவுலகம், பொன்னுலகம், முத்தும் மணியும் குலுங்கும் செல்வப்பொழில் என்ற நம்பிக்கை இருந்தது. இந்தியாவின், முதன்மையாக நமது தமிழகத்தின் முத்தும் துணியும் வாசனைத் திரவியமும் உலகெங்கும் பரவியிருந்தன. சாசர் முதல் ஷேக்ஸ்பியர் முதலிய கவிகளெல்லாம் இந்திய முத்தையும் பொன்னையும் மெச்சினர்கள். நீண்டகாலமாக ஐரோப்பியரும், யவனரும் பாரசீகம் வழியே, தரைமார்க்கமாக இந்தியாவிற்கு வந்து வாணிகம் செய்தனர். சில ஐரோப்பியர் இந்தியாவிற்குக் கடல்வழி காண முயன்றனர். அக்காலம் போர்ச்சுகல்தேசம் சிறந்துவிளங்கியது. கொலம்பஸ் என்ற வீரர், "நான் இந்தியாவைக் கண்டுபிடிக்கிறேன்" என்று கிளம்பிப் படகைச்செலுத்தி அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். வாஸ்கோடிகாமா என்பவர் தென்னப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு அரபிக்கடலுக்குத் தாவிக் கள்ளிக்கோட்டைக்கு வந்துசேர்ந்தார். அன்றுமுதல் இந்தியாவில் ஐரோப்பியர் வந்து நிலம் பெற்றனர். போர்த்துகீசியரை, நம்மவர் "பறங்கியர்" என்றனர். பறங்கியர் இந்திய

வியாபாரத்தில், பணங் குவிப்பதைக் கண்டு, டச்சுக்காரர் வந்தனர்; பிறகு ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் வந்தனர். இவ்விருவரும் சென்னையிலும், புதுச்சேரியிலும் ஊன்றிக் கொண்டனர். மற்ற வெள்ளைக்காரர்களைப் போட்டி போட்டு ஒடுக்கி இவ்விருவரும் போட்டிப்போர் நடத்தினர். கிளைவ், தூப்ளே. ஆகிய இருவரும் கொடிநாட்டப் போராடினர். இருவரும் சுதேச மன்னர் பக்கம் சேர்ந்து, மெல்ல மெல்ல அரசியல் ஆதிக்கம் பெற்றனர். முடிவில் ஆங்கிலேயர் கைதான் ஓங்கியது. கும்பினி ஆட்சி பலமானது. தில்லி—ஆர்காட் நவாபுகளின் ஆட்சி ஒடுங்கியது. ஆங்கிலேயர்கை ஓங்கியது. கிளைவ், ஹேஸ்டிங்ஸ், காரன்வாலிஸ், வெல்லெஸ்லி, மிண்டோ, பெண்டிங், கானிங்—முதலியோர் போர் நடத்தியும், தந்திரம் செய்தும் மெல்லமெல்ல இந்தியாவை வசமாக்கினர். ஐதர், திப்பு, தமிழ் வீரர், மராடியர், பாஞ்சாலர், வங்கர்—முதலியோர் எதிர்த்துப் போர்புரிந்தனர். அதிட்டச் சக்கரம் ஆங்கிலேயர் பக்கம் திரும்பியது. ஆங்கில ஆட்சியே நாட்டில் ஊன்றிக்கொண்டது. அதனால் இந்தியா உலகுடன் உறவுகொள்ளப் பல நலங்களை அடைந்தது; எனினும் அடிமை நாடாகித் தன் பொருளையும் கலையையும் கொள்ளை கொடுத்தது.)

இராகம்-செஞ்சுருட்டி] [தாளம்—ஆதி

தன்னன தானன
தன்னன தானன
தன்னன தானனன—தங்கமே,
தன்னன தானனன....

பொன்னும் நவமணியும்
பொலியுந் திருநாடு,
என்ன நம் இந்தியாவை—தங்கமே,
ஈரோப்பியர் மதித்தார்.

உண்ண நல்ல பொருளும்,
உடுக்கநல் லாடைகளும்,
எண்ணறத் தந்திடுமே—தங்கமே,
இந்திய நாடென் றனர்.

பாரசி கத்தின் வழி
பரதேச வாணிகரும்
பாரத நாட்டினுக்கே—வந்து
பண்டங்கள் கொண்டு விற்ருர்.

கப்பல் வழியைக் கண்டு,
கனக நாட்டை யடைந்தால்,
எப்போதும் இன்ப மென்றே—சிலபேர்,
எண்ணி முயன்றனரே....

நமது தேசத்தைக் காண,
நாவாயில் கொலம்பசும்
அமெரிக்காக் கண்டத்தினைத்- தங்கமே,
அதிசய மாகக் கண்டான்.

துள்ளி யெழுந்த ° காமா
சுற்றி ஆப்பிரிக்காவை,
கள்ளிக் கோட்டைக்கு வந்தே—வழி
காட்டினன் வெள்ளையர்க்கே!

மெல்ல மெல்லப் புகுந்து,
வியாபாரஞ்செய்ய வந்தே,
இல்லத்தைப் பற்றிக்கொண்டார்—தங்கமே
எத்துக் கடைக்காரரே....

போர்த்துக்கீசர் உலாந்தர்
போட்டி முடிந்தபின்பு
கூர்த்த மதி மிகுந்த—ஆங்கிலக்
கும்பினிக் காரர் வந்தார்.

நாட்டில் விளை சரக்கை,
நல்ல விலைக்கு வாங்கி,
மூட்டை சுமந்து விற்ருர்—தங்கமே
முன்வந்த வெள்ளையரே....

(குறிப்பு: ° வாஸ்கோடிகாமா.)

கோட்டை கட்டிக் குவித்த
கும்பினிக் காரருடன்,
போட்டி போடப் புகுந்தார்—தங்கமே
புதுவைப் பிரெஞ்சுக்காரர்....

வாணிகப் போட்டி முற்றி,
வலியச் சண்டை பெருகிக்
காணிக்குப் போட்டி யிட்டார்—இந்தக்
கட்டற்ற நாட்டினிலே....

ஆளுக் கரசனெனும்
ஆற்காட்டு நவாபுடன்
தோளுக்கு மிஞ்சி விட்ட—வெள்ளையர்
தோழ ரெனக் கூடினர்....

## ஆனந்தரங்கப் பிள்ளை தினசரி.

சிந்து பைரவி] [தாளம்-ஜம்பை

தானனன தன்னதன தனதான
தன்னன தந்தனன தானதான....

ஆனந்த ரங்கப்பிள்ளை தினசரியில்,
அந்தக்காலக் கூத்தையெல்லாம் காணடியோ!
மானமுள்ள இந்தியர்கள் தலைகுனிய,
மன்னவரும் சூழ்ச்சியிலே மாட்டிக்கொண்டார்.

மதிமிகுந்த புதுச்சேரி தூப்ளேயும்
சதிமிகுந்த கிளைவுடனே சண்டை செய்து,
நிதிமிகுந்த நிலத்தினிலே பிரெஞ்சுக்கொடி
துதிமிகுந்து துலங்கிடவே கனவு கண்டான்.

(1748-ம் ஆண்டு ஐதராபாதில் நைஜாம் உல்மல்க் இறந்தான். அவன் இரண்டாம் பிள்ளை நாஜிர் ஜங், சுபேதாரானன். இவனுடைய சகோதரி மகன் முஜபர்ஜங் அரசிற்குப் போட்டியிட்டான். இவனைப் பிரெஞ்சுக்காரர் ஆதரித்தனர். முஜபர்ஜங் தனது சூழ்ச்சி நிறைவேற புதுச்சேரிக்குச் சென்றான். இச்சமயமே ஆற்காட்டு நவாபு தோஸ்தராலி இறந்

தான். மகன் அன்வாருடீன் நவாபானுன். தோஸ்தராலியின் மாப்பிள்ளை சந்தாசாகிப் இவனுடன் போட்டியிட்டான். சந்தாசாகிப் முன்னே மராத்தியரிடம் கைதியானுன். பெருந் தொகை தந்து பிரெஞ்சுக்காரர் அவனை விடுவித்து, ஆற்காட்டில் திருவிளையாடலைத் தொடங்கினர்கள். ஆங்கிலேயர் நாஜிர் ஜங்கையும் முகம்மதலியையும், ஆதரித்தனர். பிரெஞ்சுக்காரர், சந்தா சாகெப், முஜபர் ஜங் ஆகிய இருவர் சேனையுடனும் படையெடுத்து, ஆம்பூரில் அன்வாருடீனைக் கொன்றனர். உடனே சந்தாசாகெபு ஆற்காட்டு நவாபானுன். அன்வாருடீன் மகன் முகம்மதலி திருச்சிக்குத் தப்பிஓடி, ஆங்கிலேயரைச் சரண்புகுந்தான். நாஜிர்ஜங்கும் அவ்வாறே. இவர்கள் சேனுபலத்தால் ஆங்கிலமேஜர் லாரென்ஸ் புதுச்சேரியைத் தாக்கிப் பிரெஞ்சுக்காரரை முறியடித்து, முஜபர்ஜங்கைக் கைதியாக்கினுன். நாஜிர்ஜங் ஆற்காட்டிற்குச் சென்ருன். அங்கே, சதிகாரர் அவனைக் கொன்றனர். உடனே பிரெஞ்சுக்காரர், முஜபர்ஜங்கை விடுவித்து அழைத்துச்சென்று, ஐதராபாத்து நவாப்பாக்கி விட்டனர். அவனையும் சதிகாரர் கொன்றனர். பிரெஞ்சுக்காரர், அவன்மகன் சலபத் ஜங்கை நவாப்பாக்கி, ஐதராபாதில் ஆதிக்கம் பெற்றனர். சந்தாசாகெபு, தனக்குப் போட்டியாய், ஆங்கிலேயருடன் சேர்ந்த முகம்மதலியை ஒழிக்கத் திருச்சிக்குச் சென்ருன். ஆங்கிலேயர் ஆபத்திலிருந்தனர். அப்போதே, கிளைவ் என்னும் தந்திரக்காரன், ஒருபடை கொண்டு ஆற்காட்டை முற்றுகையிட்டான். ஐம்பதுநாள் முற்றுகை போட்டுப் படாதபாடுபட்டுக் கோட்டைக்குள் இருந்த சுதேசிகளால் உயிர்பிழைத்துக் கிளைவ் ஆற்காட்டைப் பிடித்து, முகம்மதலியை, நவாப்பாக்கினுன். சந்தாசாகெபைக் கைதியாக்கித் தண்டித்துக் கொன்ருன், இத்துடன் பிரெஞ்சு ஆதிக்கம் தேய்ந்தது. இந்த ஆற்காட்டு முற்றுகையே, பிரிட்டிஷ் ஆட்சியின் அடிப்படையானது.)

ஐதரா பாத்தினிலே நைஜாமுல்மல்க்
அல்லாபதம் அடைந்ததுவும், அவன் மகனும்,
இதமான நாஜிர்ஜங் இறையானுன் ;
இவனுடனே முஜபர்ஜங் இகல் தொடுத்தான்.

ஆற்காட்டில் அத்திம்பேர் சந்தாசாகேப்,
அன்வாருடீன் அரசனுடன் போட்டியிட்டான் ;
பேர்வழிகள் சண்டையிலே பிரெஞ்சுக்காரர்,
பெரியதனம் செய்திடவும் உரிமை கொண்டார்....

ஆம்பூரின் அமர்க்களத்தில் சந்தாவும்,
அன்வாரைச் கொன்றரசன் ஆகி விட்டான் ;
அன்வார்மகன் முகமதலி திருச்சியிலே,
அடைக்கலமாய் ஆங்கிலேயர் துணை பெற்றுன்.
பான்மையுடன் அன்னவரும் ஆற்காட்டைப்
படையெடுத்துக் கடை விரித்தே கொடிநட்டார்.

கைகாரக் கிளைவங்கே ஐம்பதுநாள்,
கருணையுடன் செந்தமிழர் கைதரவே,
தைரியமாய்ச் சமர்புரிந்தே கைதுசெய்து,
சந்தாவைக் கொன்றெழித்தான் சதிவாளால்....

தின்றமனைக் கிரண்டு செய்யும் குண்டுணிகள்,
திருடனுக்கே உளவுசொல்லும் திருவிலிகள்,
நன்றிகெட்ட துரோகிகளின் சேட்டையினுல்,
நாடிழந்தோம், பீடிழந்தோம், வீடிழந்தோம்....

நாஜிரும் முஜபரும் கொலையுறவே,
நைஜாமாய் ஜலபட்ஜங் ஆண்டிருந்தான் ;
ஆசையுடன் பிரெஞ்சுக்காரர் அமுல் செலுத்தி,
ஆங்கிலரின் போட்டியினுல் நீங்கினுரே....

## சூர தளன்

(ஆற்காட்டிற்குப் பிறகு 1752ல் கிளைவ் இங்கிலாந்து சென்று திரும்பினுன். அச்சமயம் வங்காளத்தில் அலிவர் டிகான் சுயாட்சியைப் பலமாக நட்டுத் தன் சூரதளபதிக்கே அளித்துச் சென்றுன். சூரதளன் (சுராஜ்டௌலா) கல்கத்

தாவைப் படையெடுத்து, ஆங்கிலேயரை முறியடித்து ஒழித்தான். (ஆங்கிலேயர்களை இருட்டறையிட்டுக் கொன்ற கதை தற்போது மறுக்கப்பெற்றுள்ளது). கிளேவும், வாட்ஸனும் கப்பற்படையுடன் கல்கத்தா சென்றனர். வலுத்த சண்டை நடந்தது. அதனுல் கும்பினிக்காரருக்கு இருக்க இடம் கிடைத்தது. கிளேவ், மெல்ல சுராஜ்டௌலாவின் படைத் தலைவனை, மீர்ஜாபருக்கு ஆசைகாட்டி, வசப்படுத்திக் கொண்டு, பிளாசியில் டௌலாவை எதிர்த்துப் போர் புரிந்தான். கிளேவும் 1100 ஆங்கிலேயரும் 2000 தென்னிந்தியச் சிப்பாய்களுமே இருந்தனர். சூரஜ் பக்கம் 18000 வீரர் இருந்தனர். கொடிய போர் நடைபெற்றபோது, மீர்ஜாபர் நரி வேலைசெய்து, கிளேவின்பக்கம் தன் சேனையைத் திருப்பி விட்டான். சூாஜ், தோற்ருேடினுன். அவனை ஆங்கிலேயர் பிடித்துக் கொன்றனர். மீர்ஜாபரை அவர்கள் பொம்மை சுபேதாராக்கி, வங்காளத்தில் அமுல்செலுத்தினர். பிறகு இவனையும் கீழே இறக்கிப் பெருந்தொகை தந்த மீர்காசிமைச் சுபேதாராக்கினர். தில்லியிலிருந்த, கடைசி சுல்தானிடம் 26 லட்ச ரூபாய், கிஸ்தி தருவதாகச் சொல்லி, வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா மூன்றையும் வசப்படுத்திக் கொண்டான், கிளேவ். இறுதியில், லார்டுகிளேவே, முதல் கவர்னரானுன்; முன்னே அயோத்தி நவாபு வாஜிருடன் போர்செய்து வென்றதில், ரூ. 50 லட்சமும், வியாபார உரிமையும் பெற்ருன்.)

வங்கத்துச் சூரதளன், வலிமையுடன்,
சிங்கமெனப் பிளாஸியிலே செருத்தொடுத்தான்;
அங்குமொரு மீர்ஜாபர் அகப்படவே,
ஆங்கிலேயர் ஆதிக்கம் ஓங்கியதே!

போருக்குத் தொடைதட்டப் புரளிசெய்து,
பொன்பறித்தே இருபுறமும் பொருதவிட்டுப்
பேருக்கே, அரசாக்கிப் பின்பிறக்கிப்
பெற்ருரே, கும்பினியார் வங்கமெல்லாம்....

மீர்ஜாபர் விதியினையும் முடித்தொழித்து,
மீர்காசிம் வெள்ளியினை அள்ளிக்கொண்டே,
போர்வீரர் புரட்சிகளைச் சூழ்ச்சிகளால்,
புழுதியாக்கி உழுதுவிட்டார், புகுந்தவரே....!

(இந்த மாதிரியே, கும்பினிக்காரர் வியாபாரத்தை நாடெங்கும் விரித்தனர்; துறைமுகங்களையெல்லாம் வசப்படுத்தினர்; எந்த சுதேச ராஜ்யத்தில் இரண்டு கட்சி இருந்தாலும், அங்கே அமைதி நாட்டுவதாகச் சென்று ஒருபக்கம் சேர்ந்து இருபக்கமும் வென்று, அரசைத் தமதாக்கினர்; தமது ஆட்சிக்குத் தடையானவர்களையெல்லாம், மற்றொரு பகை மூட்டிச் சதுர்வித உபாயங்களாலும் மடக்கினர்; பிள்ளையில்லாச் சொத்தெல்லாம் தமதாக்கினர்; இவ்வாறு வாரன்ஹேஸ்டிங்ஸ், வங்காள கவர்னராகி, அயோத்தி, மகராஷ்டிரம், ரோகில்லா, மைசூர் அரசுகளில் படையெடுப்பு நடத்தினன்; அயோத்தி பீகம்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். நந்தக்குமாரிடம் ஏராளமான பொருள் லஞ்சம் வாங்கி, மறுத்தான். அவன்மேல், சீமையில் ஏழாண்டுகள் வழக்கு நடந்தது. இந்தியாவில் சேர்த்த பணமெல்லாம் அதில் இழந்து வறுமையுற்றான். ஹேஸ்டிங்ஸ் காலத்தில் ஐதராலி கிளம்பிப் பிரெஞ்சுக்காரரையும் கூட்டிக் கொண்டு, கடும்போர் செய்தான். முடிவில் மங்களூரில் உடன்படிக்கை நடந்தது. ஹேஸ்டிங்ஸிற்குப் பிறகு, காரன் வாலிஸ் கவர்னரானன். திப்பு சுல்தான், சுதந்திரப் போர் புரிந்தான். காரன், அவனை முறியடித்தான். இவன் காலத்தில், சென்னை மாகாணம் ஆங்கிலேயருக்கானது. வந்தார் வெல்லெஸ்லி பிரபு; (1798-1805.) திப்பு, பிரெஞ்சுக்காரர் மராட்டிய நானபர்னவிஸ்–நைஜாம்–தமிழ் மறவர் முதலியோர் கூட்டுறவால், ஆங்கிலேயரை இந்தியாவைவிட்டே துரத்தப் பெரும்போர் கிளப்பினன். 1799 ல் வெல்லெஸ்லி, அவனை ஸ்ரீரங்கப் பட்டணத்தில் வீழ்த்தினன். திப்பு இறந்த பிறகு, மைசூரின் இந்துராஜமரபில் வந்த கிருஷ்ணராஜ உடையாருக்குப் பட்டங்கட்டி, ஆங்கிலேயர் சர்வாதிகாரம் பெற்றனர். மைசூர்ப் போர்களால் சென்னை மாகாணம்

முழுவதும் ஆங்கிலேயருக்கானது. நல்ல துறைமுகங்கள் அவர்கள் கைக்கு வந்தன. நவாப் ஆட்சி போய்விட்டது. 1801ல் கர்நாடகம் முழுதும், ஆங்கிலக்கொடி பறந்தது. நவாப் வாஜிரை வசப்படுத்தி, வெல்லெஸ்லி ரோஹில் கண்டைப் பிடித்துக் கொண்டான். மராட்டியர் டில்லியைக் கூட வென்று, மீண்டும் தமது சாம்ராஜ்யத்தை நாட்டப் பெருமுயற்சி செய்தனர். ஆங்கிலேயருடன் பாஜிராவ் பல போர்கள் புரிந்தான். ஹோல்காரும் சேர்ந்து போராடினன். ஆர்தர் வெல்லெஸ்லி மராட்டியரை அஸ்ஸே, அரகான்-முதலிய இடங்களில் முறியடித்து, நாடெல்லாம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலைநாட்டினன்; சிந்தியா, பான்ஸ்லே, கைக்வார், ஐதராபாத் சமஸ்தானங்களிலெல்லாம், ஆங்கிலத் துருப்புகளும், ரெஸிடெண்ட் என்னும் ஸ்தானீகரும் இருந்து, தமது செல்வாக்கை நாட்டினர். 1805-ம் ஆண்டில் வெல்லெஸ்லி சீமைக்குத் திரும்பியபோது, இந்தியா முழுதும் பெரும்பாலும் ஆங்கிலேய மயமானது. மார்கிஸ், ஹேஸ்டிங்க்ஸ் மூன்ருவது மராடியப் போர் நடத்தி,பேஷ்வாக்களின் அரசையெல்லாம் பிடித்துக் கொண்டான். பம்பாய் மாகாணம் பிரிட்டிஷாருக்கானது. மிண்டோ பிரபு சமாதானம் நாட்டினன்; சண்டைக்கு இனி யாருமில்லை. பெண்டிங்கு பிரபு நாட்டிற்கு நல்ல சீர்திருத்தங்களைச் செய்தான். இவருக்கு, ராஜா ராம் மோகன்ராய், நல்ல துணைசெய்தார். டல்-ஹௌஸி, பிள்ளையில்லாச் சொத்தையெல்லாம் பிரிட்டிஷ் சொத்தாக்கி விட்டான். கானிங் காலத்தில் இந்தியா பிரிட்டிஷ் கொடிக்கீழ் வந்துவிட்டது; ஆனல், இந்திய ரத்தம் கொதித்தெழுந்து, வீரமுரசடித்துப் போர்கொடுத்து, விடுதலைக்குத் தாவியது.)

[1]வாரனுடன் [2]காரனுடன் [3]வெல்லதுரை,
மதிமிகுந்த பெண்டிங்கு டல்ஹௌஸி,
காரமிகு கன்னிங்கு கர்சனுடன்
கற்பகத்தைக் கனிகுலுக்கிப் பொன்குவித்தார்.

1. Warran Hestings. 2. Corn wallis. 3. Wellesly.

முழுவதும் ஆங்கிலேயருக்கானது. நல்ல துறைமுகங்கள் அவர்கள் கைக்கு வந்தன. நவாப் ஆட்சி போய்விட்டது. 1801ல் கர்நாடகம் முழுதும், ஆங்கிலக்கொடி பறந்தது. நவாப் வாஜிரை வசப்படுத்தி, வெல்லெஸ்லி ரோஹில் கண்டைப் பிடித்துக் கொண்டான். மராட்டியர் டில்லியைக் கூட வென்று, மீண்டும் தமது சாம்ராஜ்யத்தை நாட்டப் பெருமுயற்சி செய்தனர். ஆங்கிலேயருடன் பாஜிராவ் பல போர்கள் புரிந்தான். ஹோல்காரும் சேர்ந்து போராடினுன். ஆர்தர் வெல்லெஸ்லி மராட்டியரை அஸ்ஸே, அரகான்-முதலிய இடங்களில் முறியடித்து, நாடெல்லாம் பிரிட்டிஷ் ஆதிக்கத்தை நிலைநாட்டினுன்; சிந்தியா, பான்ஸ்லே, கைக் வார், ஐதராபாத் சமஸ்தானங்களிலெல்லாம், ஆங்கிலத் துருப்புகளும், ரெஸிடெண்ட் என்னும் ஸ்தானீகரும் இருந்து, தமது செல்வாக்கை நாட்டினர். 1805-ம் ஆண்டில் வெல் லெஸ்லி சீமைக்குத் திரும்பியபோது, இந்தியா முழுதும் பெரும்பாலும் ஆங்கிலேய மயமானது. மார்கிஸ், ஹேஸ் டிங்க்ஸ் மூன்ருவது மராடியப் போர் நடத்தி,பேஷ்வாக்களின் அரசையெல்லாம் பிடித்துக் கொண்டான். பம்பாய் மாகாணம் பிரிட்டிஷாருக்கானது. மிண்டோ பிரபு சமாதானம் நாட் டினுன்; சண்டைக்கு இனி யாருமில்லை. பெண்டிங்கு பிரபு நாட்டிற்கு நல்ல சீர்திருத்தங்களைச் செய்தான். இவருக்கு, ராஜா ராம் மோகன்ராய், நல்ல துணைசெய்தார். டல்-ஹௌஸி, பிள்ளையில்லாச் சொத்தையெல்லாம் பிரிட்டிஷ் சொத்தாக்கி விட்டான். கானிங் காலத்தில் இந்தியா பிரிட்டிஷ் கொடிக்கீழ் வந்துவிட்டது; ஆனுல், இந்திய ரத்தம் கொதித்தெழுந்து, வீரமுரசடித்துப் போர்கொடுத்து, விடுதலைக்குத் தாவியது.)

[1]வாரனுடன் [2]காரனுடன் [3]வெல்லதுரை,
மதிமிகுந்த பெண்டிங்கு டல்ஹௌஸி,
காரமிகு கன்னிங்கு கர்சனுடன்
கற்பகத்தைக் கனிகுலுக்கிப் பொன்குவித்தார்.

---

1. Warran Hestings. 2. Corn wallis. 3. Wellesly.

புலிபோலே, ஐதராலி திப்புசுல்தான்,
புயலென்ன மாரதரும் சீக்கியரும்,
சலியாத கோசலரும் பர்மியரும்,
தமிழர்களும் தாவித்தாவிப் போர்புரிந்தார்.

(1790-ல் கிளம்பினர், மருது சகோதரர். பெரியமருது, சின்னமருது, கட்டபொம்மன், ஊமையன் இவர்கள் வீரமுடன் விடுதலைப்புரட்சி செய்தனர். 1857-ல் நானாசாகெபு எழுந்து விடுதலைப்போர் செய்தான்)

பெரியமருது சின்னமருது கட்டபொம்மு....
பெயர்பெற்ற ஊமைத்துரை போர்புரிந்தார்;
அரசுரிமை பெற்றிடவே முரசடித்தே,
அஞ்சாது போர்புரிந்தார் அதிசயமாய்....

கத்திகொண்டு விடுதலையைக் கண்டிடவே,
கனல்பறக்கப் போர்புரிந்தார் நானாராவ்,
சத்திமிகு லக்ஷ்மீபாய், குமரசிங்கன்,
தாந்தியா, அப்துல்லா, அஸிமுல்லா....

மீரட்டில், கான்பூரில், டில்லியிலே,
வீரப்போர் வென்றுவெறி கொண்டவரை,
பீரங்கி வாயினிலே பிணமாக்கிப்
பெருங்கலகம் ஒடுக்கினரே, பிரிட்டிஷார்....

சாலைமரம், சோலைமரம், தூக்கு மரம்....
சண்டையென்ற ஊர்களெல்லாம் குண்டடிகள்....
நீலுடன் லாரென்ஸும் ஹாவ்லக்கும்,
நீறுசெய்தார், வடநாட்டைக் கூறு செய்தார்....

பாரதத்தின் வீரவிளக்கணைந்ததம்மா;
பந்தனையால் சுதந்தரமும் கரைந்ததம்மா....
கோரமெல்லாம் ஒழிந்ததுமே கும்பினியார்,
கொற்றவர்கை இந்தியாவைக் கொடுத்தனரே...

பக்குவமாய்ச் சரிசமனுய்ப் பரிவுடனே,
பாரதரை நடத்திடுவோம் பாரிலென்றே,
விக்டோரியா ராணிசெய்த விளம்பரத்தால்,
விருப்புடனே நம்மவரும் ஒருப்பட்டார்.

இரக்கமுள்ள விக்டோரியா, எட்வர்டு,
ஏற்றமிகு ஜார்ஜ்மன்னன் ஆற்றலுடன்,
பறக்கவிட்ட கொடியின்கீழ் பாரதரும்,
பட்டதெல்லாம் போதும் பராபரமே....!

## 15. பிரிட்டிஷ் இந்தியா.

(எதிலும் நலமும் தீதும் உண்டு. ஆங்கில ஆட்சி நமது வாழ்வை விசாலமாக்கியது. உலகுடன் நாம் பழக, ஒரு மொழியைத் தந்தது. கலகக் காடாயிருந்த இந்தியாவின் ஆயுதத்தைப் பிடுங்கி அமைதி நாட்டியது. ஆட்சிமுறையை ஒழுங்காக நடத்துவதில் ஆங்கிலேயருக்குச் சமானமில்லை, நமது நாடு, காலத்திற்கேற்ற கல்வியும், யந்திர சாதனங்களும் பெற்றது. ரயில், மோட்டார், டிராம், கப்பல், விமானம், தந்தி, போன், ரேடியோ, ஒலிப்பெருக்கி, பேசும் படம் இவையெல்லாம் சயன்ஸ் நமக்குத்தந்த அற்புதங்களே. இவற்றைக்கொண்டு ஆங்கிலேயர் நம்மை அடக்கியாண்டார்கள். நமது பொருள்களெல்லாம் கப்பலேறிச் சென்றன. நமக்குரிய கைத்தொழில்கள் யந்திரங்களுடன் போட்டி போட முடியாது, நலிந்தன. நமது தாய்மொழி, செல்வாக்கற்றது. ஆங்கிலக்கல்வி நம்மை அடிமை வேலைக்கே தயாரித்தது. நமது சமயாசாரங்களெல்லாம் போய், பிறமதங்கள் பரவி, இந்திய சமுதாயம் ஒற்றுமையிழந்து பிரிவினையால் சிதைந்தது. இந்தியா அடிமை நாடானது.)

இராகம்–செஞ்சுருட்டி] [திஸ்ரஏக தாளம்

தன்னன தானனன தன்னன தானனன
தன்ன தானனனு–தனனு
தன்ன தானனனு....

அறிவிலும் தொழிலிலும் அரசியற் சூழ்ச்சியிலும்,
அசகாய சூரர்களே—அவர்
ஆகாய வீரர்களே....
பொறிகளும் விஞ்ஞானப் புலமையும் வாணிகப்
போட்டியும் போற்றினரே—நம்மைப்
பூட்டிவைத் தாட்டினரே....

கப்பலும் ரயிலும்வி மானமும், கார்களும்,
கம்பியும் வானொலியும்-புதுப்புதுக்
கலைகளும் அற்புதமே;
அற்புத வெள்ளையர் அற்புத மாகவே,
அடிமைப் படுத்தி நம்மைக்—கொள்ளை
அடித்ததும் அற்புதமே!....

தந்தி ரயில், விமானம், தாவிப் பறந்துவரும்,
தாராள வேகத்துடன்—படைகள்
தாண்டவ மாடி வரும்.
சந்ததம் இந்தியா வந்தவர் சந்தையாய்ச்
சரக்குகள் வந்திறங்கும்—தங்கமே,
தனக்குவை ஏறிச் செல்லும்.

ஊகமும் வேகமும் ஊக்கமும் கொண்டவர்கள்
ஊட்டினர் ஆங்கிலத்தை—அடிமை
உத்யோக வேட்டைக்கம்மா....
தாகங்கொண்டு தவிக்கும் தாய்மொழி தத்தளிக்க,
தழைத்தது கல்விமுறை—ஆங்கில
சத்தம் வலுத்ததம்மா....

இந்தியர் பணத்துடன், இந்தியர் படையுடன்,
இந்தியாவைப் பிடித்தே—தங்கமே
இங்கிலாந் தாண்டதம்மா....
சொந்த நிலத்தினிலே வந்தவர்க் கடிமையாய்ச்
சுதந்திரங் கெட்டோமம்மா—சகியே,
சூழ்ச்சியிற் பட்டோமம்மா....

அன்னியக் கல்வியும் அன்னிய மோகமும்
அன்னியச் சட்டைகளும்—அணிந்தே
அன்னையை மறந்தோமம்மா....
தன்னலத் திரைகளும் தந்திர வலைகளும்,
தரித்திரத் தாண்டவமும்—போலீஸ்
தடியினால் ஆண்டனவே....

உழைப்புக்குக் கல்வியில்லை,
பிழைப்புக்கு வேலையில்லை;
உண்ண உணவு மில்லை—விலங்கை
உதறத் துணிவு மில்லை;
பழிப்பும் பலமுங்கொண்ட பந்தச் சிறை
விலங்கைப்
பட்டென் றுடைத்திடவே—வீரப்
பலமொன் றெழுந்ததம்மா....

## 16. காங்கிரஸ் இந்தியா.

(இந்தியா ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டுச் சீர்குலைந்தாலும், வேர்குலையவில்லை. ஆங்கிலக் கல்வியால் நாடு புதிய விழிப்படைந்தது. யந்திர நாகரிகத்தால், நாடு புதிய தந்திரத்தை நாடியது. நாம் எதனால் நாட்டை இழந்து அடிமைப்பட்டோம்—என்ற காரணத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு, இந்தியர் புதிய விழிப்படைந்து, உலகில் புகழ் பெறத் தலைப்பட்டனர். இந்தியாவிற்குரிய புலமையும், தெய்வத்தன்மையும் மங்கவேயில்லை. சமுதாயம், அரசியல், கல்வி, தொழில், கலை—அனைத்திலும் காலத்திற்கேற்ற சீர் திருத்தங்கள் வந்தன. அச்சம் ஒழிந்தது. சுதந்தர வீறு எழுந்தது. ராஜாராம்மோகனராய், வள்ளலார், பரமஹம்ஸர், விவேகானந்தர், ராமதீர்த்தர், அனிபெசண்டு, திலகர், தயானந்தர், லாலாஜி, அரவிந்தர், பால், பாரதி, சாவர்க்கார், ஐயர், காந்தி—முதலியோர் நவஇந்தியச் சுடர்களாய் விளங்கினர். காங்கிரஸ், நாட்டில் பெருஞ் செல்வாக்குடன் தியாகவழியில் வளர்ந்துவருகிறது. மகாத்மாவின் சத்தியாக்கிரகம் உலகிற்கே புதுவழி காட்டியது. இன்று உலகம் இந்தியாவின் புனிதப் பெருமையைப் போற்றுகிறது.)

இராகம்-காபி] [ரூபக தாளம்

தன்னன தன்னன தானு—தன
தன்னன தன்னன தானு....

வீரங் குறைவது முண்டோ?—நம்
வீறு தளர்வது முண்டோ?
பாரத சக்தி யெழுந்தே—மீண்டும்
பாரினை வென்றிடக் கண்டோம்....

தட்டுத் தடைகளை உடைத்தே—வேத
தர்மம் முன்னேறிடக் காண்போம்.
எட்டெட்டுத் திக்கிலும்—சகியே,
இசை பெருக்கிட உழைப்போம்....

இருளைப் பிளந்தொளிர் கின்ற—ஞான
இரவியைப் போன்ற மகான்கள்,
அருட்சுடர் வள்ளல்கள் வந்தார்—மீண்டும்
ஆத்ம சக்தியினைத் தந்தார்.

வீரமராடிய திலகர்-நாட்டு
விடுதலை வேள்வி நடத்தி—நவ
பாரதசக்தி யெழுப்பித்-தொண்டர்
படை நடத்தி முன் சென்ருர்.

கிழக்குடன் மேற்கலை சேரப்—பழங்
கேடுகள் யாவையும் தீர,
உழைத்த ராம்மோகனன் புதிய—காலை
ஒளிக் கதிரென வந்தான்.

சாதி மதத் தொல்லை யின்றி—சுத்த
சத்திய சன்மார்க்கம் வாழ—அருட்
சோதி நிரம்பிய வள்ளல்—வாக்கு
தொட்டு வளர்ந்ததெம் உள்ளம்.

வீறு பெற்றதயா னந்தர்—தூய
வேதசன் மார்க்கத்தை நாட்டி,
வேறுபடுத்தும் பொய் எல்லாம்—இங்கே
வீணுறச் செய்ததைக் காணும்....

பல மதங்களும் ஒன்றே-என்னும்
பரம ஹம்ஸரின் சுடராய்,
இலகும் விவேகா னந்தன்—ஞான
இசை நமக்கெனத் தந்தான்.

அன்னி பெசண்டம்மை யாரும்—நம்
அருட் கலைகளை வளர்த்தாள்;
இன்னும் பலபெரி யார்கள்—நம்
இந்திய ஊழிய ராஞர்....

ஆரியப் பிரம சமாஜம்—ராம
கிருஷ்ணர் அருள்பெற்ற சங்கம்,
சீரிய யோக சமாஜம்—போன்ற
தெய்வ நிலையங்கள் பொலிந்த!

பாரத சக்திக் கதிரே—இந்தப்
பாரெங்கும் வீசிடக் கண்டோம்;
வீர சுதந்தரம் விளங்க—செயல்
வேக மளித்தது காங்கிரஸ்....

கவி ரவீந்திர நாதர்—இயற்
கலைப் புலவன் இராமன்,
நிலவு நோபல் பரிசு-பெற்றே
நிலம் புகழ்ந்திட வாழ்ந்தார்.

சாதி மதபேத மில்லை—இதில்
சாத்திர கோத்திர மில்லை—பொது
நீதி நிலவிடும் அன்பே—வளர்
நித்தியச் சத்தியச் சபையே....

இந்து முஸல்மான் கிறிஸ்து—பார்ஸி
இன்னும் பல சமயத்தார்,
சொந்த வீடெனக் கொண்டாடும்-சபை
சுத்திசமயோக நிலையம்....

இந்தியா இந்தியர்க்காக—இதை
இந்தியரே அரசாள,
பந்த தொந்தமெல்லாந் தீர-இந்தப்
பாரிலே நாடுமுன் னேற,

கல்வி தொழில் வளம் பெருக,-நல்ல
கைத்தொழிற் செல்வம் பெருக,
சொல்லுஞ் செயலுடன் பொருந்த—இது
தொண்டுசெய் வீரரின் கூட்டம்....

வெட்டர்பன், ஹயூமுடன் ப்ராட்ஷா,—முதல்
வெள்ளைக் காரர் பலர் போற்றும்,
கட்டுப்பா டாகிய சங்கம்—இந்த
காங்கிரஸ் ஒன்றெனக் காண்போம்....

ஆலி, ஆசாது, கித்வானி-அப்துல்
அன்சாரி போன்ற முஸ்லீம்கள்,
வேலியைக் காத்த பயிராம்—வீரம்
விளைந்த காங்கிரஸ் உயிராம்....!

## 17. எண்ணிய காரியம் (காந்தி சகாப்தம்)

இராகம்-செஞ்சுருட்டி] [தாளம்-ஆதி

தன்னன தானன தன்னன தானன
தன்னன தானனன—தங்கமே
தன்னன தானனன....

எண்ணிய காரியம் ஏற்றம் பெருகிடவே,
புண்ணியக் காந்தி மகான்—எழுந்தார்,
பூரணச் சந்திரன் போல்....

சாந்தக் கதிர்கள்வீசிச் சத்தியாக் கிரகத்தை,
ஏந்திமுன் வந்தாரம்மா-சகியே,
இணையற்ற காந்தி மகான்....

நேருஜி, ராஜாஜீ, நேதாஜீ, பாபுஜீ,
நேரிய மாளவியா ஜீ-சரோஜினி,
நிலவினர் முன்னணியில்....

டாகூரும் பாரதியும் கவிமுர சார்த்திடவே,
சத்தியச் சங்கூதிடவே—தியாகத்
தணலிற் குதித் தெழுந்தார்....

அடிக்குப் பயந்ததில்லே, சிறைக்குப்
பயந்ததில்லே,
அணுகுண்டு வீசிடினும்—தங்கமே
அஞ்ச வருவதில்லே.

துடிக்கும் பாரதவீரர் சுதந்தர சக்தியினைத்
தூண்டித் தவம் புரிந்தோம்—தங்கமே,
சுடச்சுட வெற்றி கண்டோம்....

நச்சுப் பகை நடுங்க, நாமே நாமாகியதும்,
உச்சப் புக ழடைந்தோம்—சகியே,
உலகெல்லாம் கொண்டாடவே....

ஆகாச குண்டாலே. அணுவெடித் தீயாலே
ஏகாதி பத்தியங்கள்—சகியே,
இடிந்து மடிந்தனவே....

சத்திய தருமத்தால் சாத்வீக வழியினல்,
சுத்த சுதந்தரத்தை—அடையத்
துணிந்ததித் தேசம் ஒன்றே!

யந்திரப் போரிலும் இணையில்லே
யென்றுசொல்ல,
வந்த பெரும் போரிலும்—சகியே,
இந்தியா முந்தியதே....

வங்கத்தைத் தாக்கிநின்ற வலிய பகைவரையும்
சிங்கம்போல் வென்ருேமம்மா....சகியே,
செகப்புகழ் கொண்டோமம்மா....

அடிமைத் துயரில்லே; மடமை இருளுமில்லே;
விழுந்தது பாரதத்தின்—வீர
வெற்றிக் கதிரொளி பார்....!

பாரத சக்தியொன்றே பாருக்கு நன்மைதரும்;
பரமாத்ம சக்தி யென்றே—சகியே,
பாடிக்கொண் டாடிடுவோம்....

சக்திலும் சக்தியென்றே
சகமெல்லாம் இந்தியாவைச்
சாற்றிட நாற்றிசையும்—வாழ்க நம்
சரித்திர நல்லிசையே.

முன்னேற்றத்தைத் தடுத்த
முட்டுக் கட்டைகளெல்லாம்
சின்னுபின்னமாகவே—சகியே,
ஜெயக்கொடி நட்டோமம்மா....

பாரோர் வியந்துமெச்சப் பாரத நாட்டினிலே,
நேரிய மக்களாட்சி—வந்த
சீரிய நாளிதுவே

எங்கும் சமவுரிமை, எங்கும் தொழில்வளமை,
பொங்கும் கலைமுழக்கம்—சகியே,
புண்ணிய நாட்டினிலே....

பூரண சுதந்தரம் புன்னகை புரிகின்ற
பாரத தேசத்தினைச்—சகியே,
பார்க்கப் பரவசமாம்.

சாந்தம் உலகெங்கும், சமதர்ம வாழ்வெங்கும்;
காந்தி விநோபா யுகம்—கண்டு
களித்துச் செழித்தோமம்மா....

உள்ளத்திலேயமைதி, உழைப்பினிலே அமைதி,
தெள்ளிய சொல்லினிலே—அமைதி
சீவனிலே யமைதி....!

## 18. காந்தி வாழ்த்து

வாழிய காந்தி மஹாத்மா—என்றும்
வாழிய வான்கடல் வையமும் போலே
வாழையடி வாழையாக—இந்த
மண்ணிலம் வாழ்ந்திடப்
புண்ணியஞ் செய்தான் (வா)

பாரத தேசத்தைக் காத்தான்—இந்தப்
பாரினில் சத்திய ஜோதியாய்ப் பூத்தான்
காரினுங் கருணை மிகுந்தான்—அவன்
கண்ணனின் கீதையாய்க்
கண்ணெதிர் வந்தான். (வா)

கஞ்சிக் கழுது கலங்கும்—ஏழை
கவலையற் றுண்ணக்கை ராட்டினந் தந்தான்
சஞ்சலம் அற்ற அஹிம்ஸை-என்னும்
சஞ்சீவி யால்ஒரு சக்தி பிழிந்தான் (வா)

தன்னை விரதத்தால் வாட்டி—பொது
தருமத்தைக் காத்த தயாபரன் காந்தி
அன்னையின் வேள்விக் கனலில்,—தன்
ஆவியி னைப்புடம் வைத்தவன் காந்தி (வா)

கலியுகம் கண்ட ப்ரஹ்லாதன்—ஜீவ
காருண்ய புத்தன் கனிவுள்ள ஏசு,
மலையினும் மாண்புள்ள வீரன்-அவன்
மன்னுயிர் தன்னுயி ரென்ன வுயிர்த்தான்(வா)

பெரியவன் பேருபகாரி—அவன்
பேரை நினைத்தாலே பெய்யும்விண் மாரி
ஹரிஜன ரக்ஷகன் காந்தி-அவன்
அன்புள்ள சத்திய கர்மவே தாந்தி (வா)

ஏட்டில் எழுதிப் படிப்போம்—அவன்
இன்னிசை சொல்லிநாம்
இந்தியர் என்போம்
காட்டிய பாதையில் நடப்போம்-நிதம்
கைதொழுவோம் மனக்
கோயிலில் வைத்தே (வா)

## 19. எங்கள் இமாலயம்

எங்கள் இமாலயம், எங்கள் இமாலயம்
எங்கள் இமாலயமே!
மங்கள மான மகாசிவசக்தி
வளர்ந்திடும் ஆலயமே!

விண்ணை யளாவி நிமிர்ந்து விளங்கிடும்
வெண்பணி லிங்கமிதே!
மண்ணை யளந்த நெடுந்திரு மாலின்
வளம்பெறு தோற்றமிதே!

கடகடகடவெனக் கார்முகில் மந்திர
கர்ஜனை செய்திடவே
மட மட மடவென மந்தாகினிதிரு
மஞ்ஜன மாட்டிடவே

தடதடதடவெனக் கங்கையெம் பாரத
சரித்திர முரைத்திடவே
சடசடத்தாள மடித்துலகந் திருத்
தாண்டவ மாடிடுமே!

கவியர சாகிய காளிதாஸனிசை
கடவு ளிமாலயமே!
புவிபுகழ் கௌதம புத்தரைத் தந்த
புனித மலை யிதுவே!

தத்வமசி யெனுந் தாரக வாக்கியந்
தாங்கிய சங்கரரின்
அத்துவிதம் வளர் சத்தியஜோதி
யறிவு மலையிதுவே!

பாரதம் பாடிய வேதவியாசரின்
பாசுரப் பண்ணையிதே!
பாரதம் வென்றிடப் பாசுபதாஸ்திரம்
பார்த்தனுக் கீந்தமலை!

உய்வருள் யோக முனிவர் உலாவிடும்
உத்தமத் தாயகமே!
ஐயாற்றினிற்கை லாசத்தைக் கண்டநம்
அப்பர் நடந்தமலை!

இமாலயக்கன்னிமீ னாட்சியெம் சொக்கனை
இன்புற மணம் புரிந்தாள்
உமாசிவம் போன்று வடக்கொடு தெற்கும்
உறவுகொண் டோங்கிடவே

போரதிர் முரசொலி கேட்டுளம் பொங்கிப்
புயங்கள் புடைத்துயரும்
சேரசோழபாண் டியர்கொடி தீட்டிய
செந்தமிழ் வீரமலை!

சீனத்து ஞானிகள் தேனொத்த மொழியுடன்
சேவித்த தெய்வமலை
வானெட்டக் கொடிவளர் பாரத தேவியின்
மன்னரி யணை யிதுவே!

பரநாராயணன் பக்த வத்ஸலனின்
பக்தி விலாஸமிதே
நரநாராயணர் நான்மறை பாடிய
நாமகள் வாசமிதே!

எங்கள் இமாலயம் துங்க இமாலயம்
எம்முயிர் நிலையமிதே
சிங்கம்போல் வீரர்கள் வாருங்கள், இன்றிதன்
சீர்த்தியைக் காத்திடுவோம்

சோனகர் யவன பிரிடானியர் முன்செய்த
சூழ்ச்சி பலிக்கவில்லை
சீனகச் சூ-வுக்கும் கானகத் தாவுக்கும்
சிவாஜியடி கொடுப்போம்.

பித்துறு மண்வெறிப் பேயரை மொத்திட
ஒத்து வளைத்திடுவோம்
சத்திய காந்தியின் சர்வோதயக்கொடி
ஜயம்பெற உழைத்திடுவோம்.

மஞ்சள் வெறிப்புயல் மன்னு மிமாலய
மலையை யசைத்திடுமோ-எங்கள்
நெஞ்சினில் எறிய வீர நெருப்புயர்
வேள்வி சலித்திடுமோ?

சாது ஜனங்களை வேதனை செய்பவர்
தீது நிலைத்திடுமோ?
கீதையும் கண்ணனின் ஜோதியும் கொண்டவர்
கீர்த்தி நலிந்திடுமோ?

மோகப்படைகொண்டு முட்டிய கௌசிகன்
மூர்க்க மழிந்திடவே
யோகதண்டத்தினை ஊன்றிய வசிட்டனின்
ஓங்குதவம் உடையோம்

மாசுறு ராவணன் முன்னொரு தூசியை
வீசிய சீதையுண்டு-தெய்வத்
தூசிமுன் இந்திரன் அக்கினி வாயுவும்
தோற்றகதையு முண்டு

தேரினை ஓட்டிய சாரதி பாரதப்
போரினை வென்றதுண்டு
ஆரிய நாரியின் ஆடையுரிந்தவர்
அடியுடன் அழிந்ததுண்டு.

ராட்சச குண்டரசாட்சியினைக்கை
ராட்டினத் தால் வென்ற
மாட்சிமை கொண்ட மகாத்மா காந்தியின்
மாசறு நாட்டினர் நாம்.

கொலை யுணவுண்டு குடித்து வெறித்திடும்
கொடியருக்கின்ப முண்டோ?
கலையறி பாரதர் நிலையினிலே மனக்
கவலையைக் கண்ட துண்டோ?

தண்டுக்குத்தண்டு நடத்திடவும் ஜய
சக்தியின் ஆக்கமுண்டு....
குண்டுக்குக் குண்டு கொடுத்திடவும் மகா
குண்டலி யோகமுண்டு.

தாயினும் அன்புள பாரத தருமம்
தளர்ந்து பணிந்திடுமோ?
ஆயிரம் ஆயிரம் அணுவெடி வீசினும்
அதர்மம் வென்றிடுமோ?

மனமொழிமெய்யறி வொன்றுபட் டன்னையின்
மங்கலப் பணிபுரிவோம்!
ஜனகண மன அதி நாயக ஜயவெனத்
தாவிமுன் னேறிடுவோம்!

## 20. வீறு கொண்டு முன்னேறுவோம்!

தூண்டு வீரச் சுதந்திரச் சுடர்
துஞ்சி டாதினி நெஞ்சிலே!
நீண்ட மாமலை போலெழுந்து
நிருதர் சேனையைத் தாக்குவோம்!....